முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 16—10—59 வெள்ளி | ஒலி: 25

கனம் சுப்பிரமணியத்தின் 'மாப்பிள்ளை'!



"வாக்காளர்களிடம் ஓட்டுக் கேட்க வருவது, பெண் கேட்க வருவதுபோலாகும்!" என்று சிதம்பரம் தொகுதியில் கனம் அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

'கோரிக்கை தா!' - என்கிறீர்; கோரிய கையை முறிக்கிறீர்!

சுதந்திரம் வருவதற்கு முன்னொரு நாள்!

வெள்ளையனை வெளியேற்ற வடவரும் தென்னவரும் ஒன்றுபட்டிருந்த நாள். அந்த மைதானத்தில் இளைஞர் சிலர் உட்கார்ந்தனர், முரட்டுக் கதராடையைப் போர்த்துக்கொண்டு! ஒரு சில பெண்கள் சலசலப்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தின் ரகளையை அடக்கிடத் துடிப்பதாக இல்லை, மேடையிலமர்ந்த தலைவர்! மேடையில் அமர்ந்திருந்த தலைவர் யார்?

சத்தியமூர்த்தி!

'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தைக் கட்டியாளும் பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்தாட்ட வேண்டும்'—என்று பேசியதிலே அரைகுறை வெற்றியும்—

'ஜஸ்டிஸ் கட்சியை ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்டாயிற்று. இனி அதன் மேல் புல் பூண்டு கூட முளைக்காது!'—என்ற வீராப்புப் பேச்சிலே படுதோல்வியும் கண்ட சத்தியமூர்த்திதான்!

கூட்டம் சப்தமிட்டுக்கொண்டேயிருந்தது. அதை அடக்குவாரில்லை! அது சமயம் வயதுப் பெண் ஒருத்தி மேடை மீது ஏறினாள்! அரிதாரம் பூசிப் பூசி அவள் முகம் சிவந்திருந்தது!

குரலைச் சரிபடுத்திக் கொண்டாள். கூட்டத்தின் கடைசியில் இருப்பவருக்கும் கேட்கும்வரை பாடினாள்! கர்ண கடூரமாகப் பாடினாள்!

"காந்தியோ.......பரம.....ஏழை சந்நியாசி!"

கூட்டம் அவள் எடுத்த எடுப்பை — இசையமைப்பை ரசித்தது! உடனே இதுதான் சமயம் என்று உட்கார்ந்திருந்த தலைவர் எழுந்தோடி வந்தார்.

'அக்கிராசனர் அவர்களே! நம்மைப் பரிபாலனம் செய்யும் பிரிட்டிஷ் கவர்ண்மென்டார்....'—என்று வேகமாகப் பேச ஆரம்பித்து விட்டார்!

இப்படி சத்தியமூர்த்தி பேச கூட்டத்தை அமைதி செய்து கொடுத்த பெண் யார் தெரியுமா?

இன்றைய எம். எல். சி—சில சமயங்களில் காங்கிரசிற்காக மேடையேறிப் பாடும் திருமதி. கே. பி. சுந்தராம்பாள் அவர்கள்!

இவ்வகையில் சத்தியமூர்த்திக்குப் பிடித்தவர் கே. பி. சுந்தராம்பாள். அதே போல் அவருக்குப் பிடித்த இன்னொரு பொருளின் பெயர் என்ன தெரியுமா?

மலர் மாலை!

சத்தியமூர்த்திக்கு மலர் மாலை என்றால் உயிராம்! மலர் மாலை போடும் வழக்கத்தை அதிகப் படுத்தியவரே அவர் தானாம்!

மாலையைப் போட்டுக் கொண்டே பேசுவாராம், பேசுவாராம், காலை, மாலை—என்று பாராது!

மாலையைப் போட்டுக்கொண்டு தான் ஊர்வலம் வருவாராம்! அப்போது அடிக்கடி மாலையை முகர்ந்து பார்த்துக்கொண்டே போவாராம்!

வீட்டிற்கு வந்தாலும் மாலையைக் கழற்ற ரொம்பவும் துக்கமடைவாராம். போட்டுக் கொண்டேயிருந்தால் நன்றாக இருக்காதா? — என்று எண்ணுவாராம்!

இப்படி மாலைமேல் மாறாத காதல் கொண்ட சத்தியமூர்த்தி கண்டெடுத்த வாரிசுதான் காமராசர். அவர் ஆட்சியில் மலர் மாலைக்கிருக்கும் மதிப்பென்ன? மலர் மாலை போட்டு அதனுடன் தரும் கோரிக்கைக்கு இருக்கும் மதிப்பு என்னவென்று தெரிய வேண்டுமா? இதோ அதற்கு ஒரு நிகழ்ச்சிக் கோவை!

"மலர் மாலைகள் வேண்டாம்!"

—கூறியிருப்பது பெரியார் ராமசாமி அல்ல; மந்திரி பக்தவத்சலம்!

மந்திரிகள் மலர் மாலைகளை வெறுக்கிறார்களா? — என்று மக்கள் ஆச்சரியப்படக்கூடும். அவர்கள் ஆச்சரியம் மேலும் மேலும் வளரும்படி அடுத்து அவர் பேசிய பேச்சிருக்கிறது.

"மாலைகளால் என்ன பயன்? அதற்குப்பதிலாக உங்கள் கோரிக்கைகளைத் தாருங்கள். அதன் மூலம் உங்கள் துயரங்களைத் தெரிந்துகொள்ள முடியும்!"

—நம்முடைய மந்திரியா இச்சொற்களை உச்சரித்தது? காங்கிரசார் ஆட்சியில் மக்கள்பேரில் மந்திரியின் பார்வை அவ்வளவு சீக்கிரமாகத் திரும்பிவிட்டதா?—என்று வியப்பாலேயே பொது மக்கள் சிறிது நேரம் மூச்சுவிட மறந்துவிடக்கூடும்.

'கோரிக்கைகளைத் தாருங்கள்! உங்கள் துயரங்களைத்தெரிந்து கொள்கிறோம்!'

—இந்த நல்லெண்ணம் நெடு நாட்களுக்கு ஒருமுறையாவது அமைச்சரின் உள்ளத்தில் தோன்றுவதுபற்றி மகிழ்ச்சியடைகிறோம்.

மக்களைப்பற்றி அறிய வேண்டும்—அவர்களை வாட்டும் வருத்தங்கள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்—என்ற பொறுப்புணர்ச்சி தோன்றியது பற்றியும் பெருமகிழ்வு கொள்கிறோம்.

ஆனால், இதுவரை கொடுக்கப் பட்ட கோரிக்கைகள் என்னவாயின?

ஒட்டிய வயிற்றுக்கு சோறளிப்பீர்—என்று கட்டிய முழங்கால் துண்டுடன் ஊர்வலம் நடத்திய 'பட்டினிப் பட்டாளங்கள்' சமர்ப்பித்த கோரிக்கைகள் என்னவாயின?

'நெய்யும் தொழில் செய்து வந்தோம், இன்று எங்கள் குடும்பம் வறுமையால் நசித்துப் போகிறதே! எங்கள் கண்ணீரைத் துடைப்பீர், கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழி காட்டுவீர்'—என்று கூவி, உங்களிடம் கோரிக்கை சமர்ப்பித்தார்களே, நெசவாளர்கள்: அது என்னவாயிற்று?

'எழுநூறு குடும்பங்கள் விழப் போகின்றன சாவுக் குழியிலே. காப்பாற்றுவீர்! சாப்பாட்டுக்கு வழி செய்து, பசியால் ஏற்பட்ட செவியடைப்பை நீக்குவீர்!'—எனக் கதறிக் கொண்டிருக்கும் தினமணி—எக்ஸ்பிரஸ் தொழிலாளர்களின் கோரிக்கைகளை எங்கு விட்டெறிந்தீர்கள்?

அத்தனை ஏன்? கனம் காமராசரையே அழைத்து நியாயமான கோரிக்கைகள் பலவற்றை காஞ்சி

[தொடர்ச்சி பக்கம்—12]

சென்னை மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு

அக்டோபர் 17, 18, சனி, ஞாயிறு (எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்)

தலைவர் :	திறப்பாளர் :
டி. கே. சீனிவாசன்	இராம. அரங்கண்ணல்

அறிஞர் அண்ணா, பொதுச்செயலாளர்

மற்றும் கழக முன்னணியினர் அளிக்கும் அரசியல் கருத்துக்கள்

சிதம்பரம் செயராமன் நாகூர் அனிபா அளிக்கும் இசையமுது	17-ந் தேதி கலைஞர் மு. கருணாநிதி எழுதி, நடிக்கும் "உதயசூரியன்" நாடகம்.	18-ந் தேதி திருச்சி நாவலர் நாடக மன்றத்தின் 'பரப்பிரம்மம்'

இரு நாட்களுககும் கட்டணம்; ரூ. 10, 5, 3. 2. தாய்மார்களுக்கு : ரூ. 1.

கே. எம். கண்ணபிரான், வி. இளஞ்சேரலாதன், செயலாளர்கள். அ. பொ. அரசு, பொருளாளர். கோ. செங்குட்டுவன், வ. கு. தலைவர். தி. சு. நலலதம்பி, தொ. ப. தலைவர்.

வெள்ளி 16—10—59 சென்னை

கோட்சே; நீ நல்லவன்!

திரிசடை விரித்து—பகை வெல்லும் சூலமேந்தி—அநீதியை அழித்தொழிக்கும் சக்தி படைத்தாள் எம் ஜெகன்மாதா என்று உடுக்கையடித்து—ஊர் கூட்டி—உபதேசம் செய்கின்ற பூசாரி, மாகாளியின் சன்னிதானத்திற்கு வருகின்ற மங்கையரைக் கரம் பிடித்திழுத்தான்; அவர் கற்பைச் சூறையாடினான்—என்றெல்லாம் செய்திகள் அன்றாடம் வருகின்ற நாள் இது!

நெறிகாப்பாள் என்று பூசையிடுகின்ற பக்த சிரோண்மணிகளின் நம்பிக்கை குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது! சர்வ வல்லமை படைத்தவளின் சன்னிதானத்தில் இத்தகைய சீர்கேடா — என்று பூசாரியும் நினைத்தானில்லை! காரணம், அது சிலை தானே — எந்தக் கொடுமைகளையும் கண்டும் கேளாத நிலை தானே — என்ற சமாதானமும் அவன் உள்ளத்தே எழும்பியிருக்கமுடியும்!

உள்ளத்தை இரும்பாக்கிக் கொள்ளுகின்ற இத்தகையவர்களை கோயில்களிலே மட்டும்தான் நாம் காண முடியும் என்பதில்லை, இன்று கோலோச்சுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள்கூட சிலைக்குத் தருகின்ற மதிப்பு இந்த விதத்திலேதான் இருக்கிறது!

மாகாளியின் சிலைக்கும், நாட்டிலே நிறுவப்படுகின்ற மாமேதைகளின் சிலைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

அத்தகைய சிலைகள் நிறுவுவதற்கான அவசியம் என் ஏற்படுகிறது? நாட்டிலே அப்போதைக்கப்போது பிறப்பெடுக்கின்ற பேரறிஞர்கள் போதித்துச் சென்றவைகளை நாடு மறந்துவிடக்கூடாது! நல்லவர்களின் அடிச்சுவட்டிலே நடந்து செல்ல வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு அந்தச் சிலைகள், அவர்களது வாழ்வை நினைவுபடுத்தும் கருவியாக—கருத்துக்களை எடுத்தோதிக் கொண்டிருக்கும் பாடப் புத்தகங்களாக இருக்கின்றன!

ஆகவேதான் அந்த நினைவுச் சின்னங்கள் நல்லதோரு கருவூலத்திற்குத் தரப்படுகின்ற மதிப்புடன் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

ஆனால், இன்று நாட்டிலே மூலைமுடுக்கெல்லாம் நிறுவப்பட்டிருக்கின்ற காந்தியாரின் சிலைகள் எதை எடுத்துக் காட்டுகின்றன? கொள்கைகளைக் காக்க சிலை நிறுத்த வேண்டுமென்ற உண்மை இங்கே புலப்படவில்லை; அவரது தூய கருத்துக்களைச் சவமாக்கி—இடுகாடு தூக்கிச் சென்று—ஆழக்குழிதோண்டிப் புதைத்தபின்—அங்கே ஒரு சமாதியைக் கட்டுகிறார்கள்! அந்த சமாதிக்குத் தரப்பட்ட உருவம்தான் காந்தியாரின் சிலை!

அவரது போதனைகள் மறைந்துவிட்டன; நல்ல கருத்துக்கள் காற்றில் சிக்கிய சருகாகப் பறந்துவிட்டன; வழிகாட்டும் தொண்டுள்ளம் ஏட்டிலே மக்கி மடியும் எழுத்து வடிவம் பெற்றுவிட்டது

ஆனால், அவரது சிலைகள் மட்டும் நாடெல்லாம்—நாளெல்லாம் நிறுவப்படுகின்றன!

இன்று அந்தச் சிலைகள்கூட, அவரது கொள்கைக்குக் கிடைத்த மதிப்பைப் பெற்றுவிட்டன என்கிற செய்தியறிந்து மிகவும் வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

சென்னையில், அழகு கொழிக்கின்ற மெரினா கடற்கரையில் ஐம்பதினாயிரம் ரூபாயை விழுங்கிக்கொண்டு ஒரு சிலை நிற்கிறது. அதை நேரு பிரான்தான் டெல்லியிலேயிருந்து வந்து திறந்து வைத்தார்; அதை 'காந்தியாரின் சிலைதான்' என்றும் சொல்கிறார்கள். எதிர்ப்புக்கள் அநேகம் உண்டு அதற்கு. அந்தச் சிலையின் கோரமான உருவத்தைக் கண்டு 'இவரா காந்தி' என்று மூக்கில் விரல் வைத்து வியந்தவர்கள் அநேகர்; அகற்றிவிடத்தான் வேண்டும் என்று அபாய அறிவிப்புக் கொடுத்தவர்கள் ஏராளம்!

ஆனால், அந்தச் சிலை இன்று சிலையை நிர்மாணித்தவர்களால் எப்படிக் கவனிக்கப்படுகிறது என்கிற கதை மிகவும் அவலச் சுவையுள்ளதாக இருக்கிறது. இத்திங்கள் இரண்டாம் நாளன்று காந்தியார் பிறந்த தினத்தை மறந்து விடாமல் விழாக் கொண்டாடினார்கள். சென்னையில் காந்தியார் சிலைக்குக் கொஞ்ச தூரத்திலேயே கடற்கரையில் கூட்டம் கூட்டினார்கள்; அமைச்சர் முதல் இயக்கத் தொண்டர்வரை முழங்கினார்கள். காந்தியாரைப் பற்றி புதுப் புது புகழுரைகளை—கேள்விப்பட்டிராத விளக்கங்களை கைதட்டல்களுக்கிடையே எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால், பக்கத்திலே நின்று கொண்டிருந்த காந்தியாரின் சிலை பரிதாபகரமாகத் தோன்றியது! அந்த நாளில்கூட அது சுத்தப்படுத்தப்படவில்லை! அதன் கழுத்திலே ஒரு மாலையில்லை!

சென்னையிலே இன்னும் அநேக சிலைகள் இருக்கின்றன. அதே மெரினா கடற்கரையில் இருக்கின்ற டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையாரின் சிலை ஒழுங்காகக் கவனிக்கப்படுகின்றது. பெரிய மருத்துவமனை வாயிலில் நிற்கின்ற டாக்டர் ரங்காச்சாரியாரின் சிலை உயிருள்ள மனிதரைப் போலவே நிற்கக் காண்கிறோம்.

சென்னை நகர மன்றமாம் வெள்ளை மாளிகையின் வாசலில் வெள்ளுடை வேந்தனும் தியாகராயரின் சிலை ஒன்று நிற்கிறது. தமிழர் நலம் காத்த அந்த முதல்வனின் சிலை ஆண்டுகள் பலவாக அங்கே நின்றிருக்கின்றது, அழுக்கடைந்த மேனியைத் துடைப்பார் யாருமின்றி! அந்தச் சிலை, காங்கிரஸ் தோழர்களின் நிர்வாகத்தில் அவமானப்படுத்தப்பட்டது. ஆனால், நம்மவர்கள் நகர மன்றத்தில் நுழைகின்ற பெருவாய்ப்பைப் பெற்ற நேரத்தில் அந்தப் பெருந்தகையாளனின் சிலைதான் முதலில் கௌரவிக்கப்பட்டது. தலை முதல் பாதம் வரை தொங்கும் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்!

இதுபோன்ற காட்சிகளைக் காணுகின்ற சென்னை நகரம்தான் காந்தியாரின் பிறந்த தினத்தன்று அவர் சிலை கவனிப்பாரற்று நிற்கின்ற நிலைகண்டு வருந்தியது.

"காந்தியார் பிறந்த நாளன்று அமைச்சர்கள் உள்ளிட்ட எல்லாக் காங்கிரஸ்காரர்களும் அதிகமாக மேடைப் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

"ஆனால், அன்று மெரினா கடற்கரைக்கு வந்திருந்த பார்வையாளர்கள், மிகுதியான விளம்பரத்துடனும் ஏராளமான பொருட் செலவிலும் கட்டப்பட்ட காந்தியாரின் நினைவுச் சின்னத்தின் அலங்கோல நிலைகண்டு வேதனைப்படத்தான் வேண்டியிருந்தது. ஏப்ரல் திங்கள் நிறுவப்பட்ட அந்தச்சிலை, ஒரு நாள்கூட தூய்மைப்படுத்தப்படவில்லை!"

—இப்படி வேதனையை வெளிப்படுத்தி — காந்தீயவாதிகளின் கண்ணியமற்ற போக்கைக் கண்டித்து 'இந்து' இதழ் தலையங்கமே தீட்டியிருக்கிறது!

அந்தோ காந்தியாரே! இந்தத் தலைமுறையோடு உங்கள் கொள்கைகளை அழித்துவிடக் கங்கணம் கட்டிவிட்ட உம்மது சீடர்களைப் பாருங்கள்; இவர்களைவிட கோட்சே நல்லவன்; இல்லையா? ❖



13—10—59 அன்று இரவு சென்னைக்கு வந்த பிரதமர் நேருவை, நகரத் தந்தை அ. பொ. அரசு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வழியனுப்பும் காட்சி.



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

54. பேனாவீரன் வால்டேர்

அன்புள்ள மாதவி,

'எண்ணங்களே உலகை ஆளுகின்றன!' என்ற தத்துவம் உலக வரலாற்றில் பலமுறை நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது. சில எண்ணங்கள் மனித உள்ளங்களை உறுதியாகப் பற்றிவிடும்போது. அந்த எண்ணங்களால் மனிதர்கள் ஆட்டி வைக்கப்படுகிறார்கள். தம்முடைய கருத்து நிறைவேறுகின்றவரை அவர்கள் ஓய்வு கொள்ளுவதில்லை. மனித சிந்தனை ஒரு அபார சக்தி பெற்று, உலகப் போக்கை இயக்கும் மூல சக்தியாகிவிடுகிறது. வரலாற்றில் புதிய திருப்பங்கள் தோன்றுகின்றன. மக்கள் வாழ்க்கையில் புதுப்புது மாறுதல்கள் ஏற்படுகின்றன. அரசியல் வாழ்வில் புது முறைகள் வகுக்கப்படுகின்றன. பழையன கழிகின்றன. புதியன புகுகின்றன. இந்த வரலாற்று நியதியை உணர்ந்ததால்தான் தமிழ்ப் பேரறிஞன் தொல்காப்பியன், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; கால வகையினானே!' என உணர்த்தினான். இப்படிப் பழையன கழியவும் புதியன புகவும் காரணமாயிருந்த சிந்தனையாளர்கள் பேனா மன்னர்கள்— தங்கள் வலிமைமிக்க கருத்துக்களால், வளமிக்க இலக்கியங்களால் — மன்னர்களை மருள வைத்தனர்; மணிமுடிகளைச் சரிய வைத்தனர்; மக்கள் சக்தியைத் திரட்டினர். வாள் பலத்தால் சாம்ராஜ்யம் நிறுவி, வலிமை மிக்க படையின் துணையால் அதைக் காத்துவிடலாம் எனக் கனவுகண்ட மன்னர்கள், எழுத்தாளனின் பேனா முனையிலிருந்து புறப்பட்ட சொல்லம்புகள் தம் எதேச்சாதிகார பீடத்தின் அஸ்திவாரத்தையே தாக்கித் தகர்க்கும் வலிமை பெற்றிருப்பதை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தனர். வாளேந்தியவர்கள்தான் வரலாற்றுத் தலைவர்கள் என்ற நிலைமாறி, பேனா மன்னர்களும் பேச்சாற்றல்மிக்கவர்களும் வரலாற்றைப் படைப்பவர்கள் என்ற உண்மை ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இந்த வரிசையில், ஐரோப்பாவில் தோன்றிய மகத்தான பிரஞ்சுப் புரட்சிக்குக் காரணமான கருத்துக்களை மக்களிடையே விதைத்தவர்களில் மூவர் குறிப்பிடத்தக்கவர். பிரஞ்சுக்காரரான வால்டேர், ஸ்விஸ் இனத்தைச் சார்ந்த ரூஸோ, ஆங்கிலேயரான பெய்ன் ஆகியோரே அவர்கள்!

1694-ம் ஆண்டு பாரிஸ் நகரில் பிறந்தவர் வால்டேர். அவருடைய இயற்பெயர் ஃபிராங்கோயிஸ் மேரி அவ்ரோட் என்பது. அவர் வைத்துக் கொண்ட புனைப் பெயர்தான் வால்டேர் என்பது. அவருடைய இயற்பெயர் மறைந்து புனைப் பெயரே நிலைத்துவிட்டது. வால்டேர் பிறந்தபொழுது நோயால் மிகவும் நலிவுற்ற குழந்தையாக விளங்கினார். பிள்ளை பிழைக்காது என்று பெற்றவர்களும் மற்றவர்களும் நம்பினர். பிள்ளை பிழைத்தது மட்டுமல்ல; எண்பத்து மூன்று ஆண்டுகள் அது இந்த நிலவுலகில் வாழ்ந்து எண்ணற்ற சாதனைகளைப் புரிந்தது. சிறு குழந்தையாக இருக்கும்போதே தனது அபார ஞாபக சக்தியால் வால்டேர் மற்றவர்களைத் திணற அடித்தார். மூன்று வயது நிரம்பிய போதே லாஃபான்டேனின் குட்டிக் கதைகளை அப்படியே திருப்பிச் சொல்லும் நினைவாற்றல் வால்டேருக்கு இருந்தது. பாதிரிகள் நடத்திய பள்ளிக்கூடமொன்றிற்கு அவர் அனுப்பப்பட்டார். அவரது கூர்த்த மதியைக் கண்டு பாதிரிகள் திகைத்தனர். சிறு பையனாயிருக்கும் போதே எதையும் அரைகுறையாக தெரிந்து கொள்வதில் அவர் திருப்தியடைவது இல்லை. இளம் பிராயத்திலேயே நினைவாற்றலை நிறையப் பெற்றிருந்த அவர் சீக்கிரமே தான் எண்ணும் எண்ணங்களை எழில்பட எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர் என்பதையும் நிரூபித்தார். அவர் இருபது வயதாக இருக்கும் போதே கவிதைகளையும், நாடகங்களையும், இதர சிந்தனைக் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார். அவை இலக்கியச் சுவை சொட்டும் எழுத்தோவியங்களாக மட்டும் இருக்கவில்லை. அப்பொழுது பிரான்சில் வாழ்ந்த பெரிய மனிதர்களின் பித்தலாட்டங்களையும், பாதிரிகளின் பாப வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டும் கருத்துக் களஞ்சியங்களாக விளங்கின. கூர்மையான சொற்களால் கேலியும் கிண்டலும் கலந்து பின்னப்பட்ட அந்தச் சொல்வலையில் பிரஞ்சு நாட்டுச் சீமான்களும், அவர்களுக்குப் பக்கமேளம் வாசித்த மதகுருமார்களும் சிக்கித் தவித்தனர்.

இங்கிலாந்தில் குடம் குடமாகத் தேநீர் அருந்தி விட்டு டாக்டர் ஜான்சன் மதஸ்தாபனங்களுக்கு சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டிருந்த போதுதான், காலன் காலனாகக் காப்பி அருந்திவிட்டு பிரான்சில் மடாலயங்களின் ஊழல்களை வால்டேர் சாடிக் கொண்டிருந்தார். பெரிய மனிதர்கள் சும்மா இருக்கவில்லை. சட்டத்தின் துணையை நாடினர். பாரிசிலிருந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற பாஸ்டில்லி சிறையில் அவர் அடைக்கப்பட்டார். இந்த பாஸ்டில்லி சிறைதான் வால்டேரின் வலிமைமிக்க பேனா தோற்றுவித்த பிரஞ்சுப் புரட்சியின் போது புரட்சிக்காரர்களால் உடைத்தெறியப்பட்டது. அந்தச் சிறையிலிருந்து அவர் எண்ணிய எண்ணங்களுக்கு அந்தச் சிறையின் கதவுகளையும் சுவரையும் உடைத்தெறியும் ஆற்றல் இருந்ததை அப்பொழுது அவர் உணர்ந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அவர் இறந்து பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகே, பிரஞ்சுப் புரட்சி தோன்றியது. தன் எழுத்து ஏற்படுத்தி விட்ட புரட்சியைக்காண அவர் உயிரோடு இருக்கவில்லை!

பதினெட்டு மாதங்கள் பாஸ்டில்லி சிறையில் இருந்தார். சிறையிலிருக்கும் பொழுதும் சிறையிலிருந்து வெளிவந்த பிறகும் தொடர்ந்து எழுதினார். இவருடைய எழுத்தால் பாதிக்கப்பட்ட 'பெரிய மனிதர்கள்' குண்டர்களுக்குக் கூலி கொடுத்து இவரை உதைக்கச் செய்தனர். முடிவில் இவருடைய போக்கைச் சகிக்க முடியாத பிரஞ்சு அரசாங்கம் இவரை நாடு கடத்தியது. வெகு காலம்வரை அவர் பிரான்சுக்குத் திரும்பி வரவே இல்லை, நான்காண்டுகள் இவர் இங்கிலாந்து நாட்டிலே கழித்தார், அந்தக் காலத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார். ஆங்கில மக்களின் சமூக வாழ்க்கை இவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அரசியலில் அவர்கள் கடைப்பிடித்த ஜனநாயகக் கோட்பாடுகளும், தனி வாழ்வில் அவர்கள் போற்றி வளர்த்த உரிமையுணர்ச்சியும் வால்டேரை மிகவும் கவர்ந்தன. 'கலிவரின் யாத்திரை' என்ற நூலை எழுதிய ஜோனதன் ஸ்விஃப்ட். ஆங்கிலக் கவிஞர் அலக்சாண்டர் போப், சிந்தனையாளர்களான யங், காங்கிரீவ், செஸ்டர்ஃபீல்ட். லாக், ஹ்யூம் போன்ற பெரியார்களின் நட்பை வால்டேர் இங்கிலாந்தில் இருக்கும்பொழுதுதான் பெற்றார்.

நாடு கடத்தப்பட்ட வால்டேரின் பேனா இயங்கிக்கொண்டேதான் இருந்தது: எண்ணற்ற நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளிவந்தன. இலக்கியத்தின் எல்லாத் துறைகளையும் அவருடைய பேனா வளப்படுத்தியது. வரலாற்று நூல்கள் எழுதினார்; சிந்தனையைத் தூண்டும் அரசியல் கட்டுரைகள் வரைந்தார்; சமூக வாழ்க்கையில் நிரம்பிக் கிடந்த ஊழல்களைக் கேலி செய்யும் நாடகங்களை எழுதினார்; கற்பனை நிறைந்த கவிதைகள் யாத்தார்; உணர்ச்சிமயமான கடிதங்கள் தீட்டினார்; புரட்சிக் கருத்துக்கள் நிரம்பிய துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார்! அவருடைய நூல்கள் இலக்கிய அலமாரிகளை மட்டிலுமே அழகுபடுத்தவில்லை; பிரஞ்சு சமுதாயத்தில் மகத்தான புரட்சியைத் தோற்றுவிக்கும் சக்தி வாய்ந்த கருவியாக இருந்தது. உலகில் விரல்விட்டு எண்ணத்தக்கத் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் என வால்டேர் ஒப்புக் கொள்ளப்பட்டார். பிரஞ்சு உரைநடையை அவரைப் போல் லாவகமாகக் கையாண்டவர் எவருமில்லையென இலக்கிய விமர்சகர்கள் கருதுகிறார்கள். அவர் எழுதிக் குவித்த எண்ணற்ற ஏடுகளில் சுவையற்றது என்று சொல்லத்தக்கது எதுவுமேயில்லையாம். இலக்கியத்தில் அவர் தொட்டுத் துலங்காத துறையில்லை. வரலாற்று நூல் என்பது வெறும், மன்னர்களின் வாழ்க்கைத் தொகுப்பாக மட்டும் இருந்துவிடக் கூடாது என்பது வால்டேரின் கருத்து. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவனுடைய சாதனைகள் என்ன என்பதை அது விளக்க வேண்டுமென்றே வால்டேர்

[தொடர்ச்சி பக்கம்—10]

கண்ணே தெரிவதில்லை! காதாவது கேட்குமா?

★

இந்தக் காருண்ய சர்க்காரை நம்பி கோடிக்கணக்கான அப்பாவி மக்கள் உயிர் வாழ்கிறார்கள். இவர்கள் நம்மைக் காப்பார்கள், நல்ல வசதி தேடித் தருவார்கள் நல்ல சேதிகள் தருவார்கள்—என்ற நம்பிக்கையிலே தங்கள் தங்கள் தொழிலை செய்து வருகிறார்கள்!

ஆனால் அவர்களுக்குத் தெரியாது, இந்த அரசு நம்பிக்கைக்கு உகந்த அரசு அல்ல என்பது! வாழ்ந்திட வசதித் தேடித்தந்திருந்தால், நம்மை வாட்டுமா பட்டினிக் கொடுமை? நாட்டில் பீடுநடை போடுமா உணவு பற்றுக்குறை நிலைமை? நம்மைக் காத்திட இந்த அரசுக்கு வலிவிருந்தால் எல்லையோரங்களில் சீனர்களின் ஆதிக்கக் கொடி பறக்குமா? இவைகள் தான் போகட்டும், நல்ல சரியான செய்திகளாவது தருகிறார்களா? இல்லை; இல்லை!

அண்மையில்கூட அரசினர் வெளியிட்ட வழிகாட்டியொன்றில் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரமாம் சாண்டிகர் நகரததையே காணோமாம்!

அந்த வழிகாட்டி இந்திய இரயில்வே வெளியிட்ட இரயில்வே போக்குவரத்துக்களைக் குறிக்கும் காலக் குறிப்பாம்! இதுமட்டுமல்ல; 1959—ம் ஆண்டு ஜூலையில் வெளி வந்த காலக்குறிப்பில்தான் அது இணைக்கப்பட்டுள்ளதாம்! அதாவது மூன்று மாதங்களுக்கு முன்வரை இந்த இமாலயத்தவறு திருத்தப்படவில்லை!

ஆம்; ஒரு மாநிலத் தலைநகரையே காணோம்! அது அரசினர் வெளியிட்ட வெளியீட்டில்!

தலைநகரையே மறந்துவிடும் இளவிற்கு அலட்சியக் கொழுப்பு அவர்கள் கண்களை மூடிக் கொண்டிருக்கிறது! அந்தோ பாவம் இவர்களையும் நம்பி இருக்கிறார்களே, முப்பத்தைந்து கோடி மக்கள்!

★ எங்கே எங்கள் கல்யாணம்? ★

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு — தஞ்சை மாவட்டத்தில் திராவிடர் கழக கூட்டங்களில் நானும் நண்பர்களும் சொற்பொழிவாற்றச் செல்லும்போது ஒரு துடிதுடிப்புள்ள இளைஞர் எங்களோடு சேர்ந்து சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டு மேடைகளில் மிக அருமையாகப் பாடுவார்.

நாகை அம்மைநாதன் பாடல்களை அந்த இளைஞர் உணர்ச்சி ததும்பப் பாடும்போது மக்கள் பெரும் ஆரவாரம் செய்து வரவேற்பார்கள். அந்தக் காலம் நாங்களே இளைஞர்கள்— எங்களைவிட வயதில் குறைந்த அந்த இளைஞரின் இயக்க ஆர்வங் கண்டு பாராட்டாதவர்கள் இல்லை.

மற்றவர் எழுதிய பாடல்களை மட்டுமன்றி தானே கற்பனை செய்து ஒன்றிரண்டு பாடல்களையும் அந்தப் பிஞ்சுப் பருவத்தினன் பாடிக் காட்டி எங்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்த நிகழ்ச்சியை என்றும் மறக்க இயலாது.

"ஏ! வட்டிக்கடை சேட்டு!
நீ வாலையாட்டாமல் கம்பி நீட்டு!"

என்றைக்கோ அதிராம்பட்டினத்து மேடையில் அந்த இளைஞர் பாடின பாட்டு! சொந்தக் கற்பனை! இன்றைக்கும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதையும் நினைத்துக் கொண்டு இதையும் ஒருமுறை படித்துப் பார்க்கிறேன். படிக்க முடியவில்லை. கண்களுக்கு நீர் திரையிடுகிறது.

"செப்புக்காசு கூடச்
செஞ்சி நாட்டான்—வட
சீமைக்குக் கட்டிட மாட்டான்
—டில்லி
சேவடிக்கு தினம் காவடி
தூக்குவோன்
தெரிஞ்சும் எப்படிக்
கேட்டான்?
இப்புவி மக்கள் இருப்ப
தெல்லாம்—அவன்
அப்பன் வீட்டு நிலமோ?
இந்தக்
குப்பை கூளங்களின் தப்புச்
செயல்களை
ஒப்புக் கொள்ள வேணுமோ?
நான் கப்பம் கட்டவேணுமோ?"

'ரங்கோன்ராதா' படத்தில் ராஜாதேசிங்கு நடனத்திற்கு அந்த இளைஞர் எழுதிய பாட்டுத்தான் இது! வயதில் கிழவர் என்ற பெயர் வாங்காமலே போய்விட்டார், அந்த இளைஞர்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் — ஒரு கவிஞரின் பெயரல்ல இது! திரையுலகில் தோன்றி மறைந்துவிட்ட ஒரு இளம் சகாப்தத்திற்கு இடவேண்டிய பெயர்!

மேடையில் பாடும் நிலையில் தோன்றி, நாடகமேடையேறி, பின்னர் அரசியல் கட்சித் தலைவர்களின் தொடர்புகள் அதிகமாகி, பொது உடமைக் கட்சி நண்பர்களின் கூட்டுறவு ஏற்பட்டு, "இவர் எந்தக் கட்சி?" என்று எல்லோருமே ஐயப்பாட்டுடன் நோக்கும் வகையில் அனைவரிடமும் நன்கு பழகி, கலையுலகில் கனிமரம் ஒன்று தழைத்து வளர்கிறது என்று கூறிடும் புகழ்ச் சொல்லைத் தனக்குரிமையாக்கிக் கொண்டு திடீரெனப் புயற்காற்றில் சாய்ந்தது போல் சாய்ந்துவிட்டார் என்றும் சாகாத இளங்கவி கல்யாணம்!

அவர் பாடல்களில் தத்துவம் தலைநீட்டும். பக்தி வெள்ளம் பெருக்கெடுக்கும். பாட்டாளியின் குரல் தீவிரமாக ஒலிக்கும். பகுத்தறிவுப் பேரிகை முழங்கும். இப்படி அவர் கேட்டவர்க்குக் கேட்டபடி பாட்டெழுதினர் என்றாலும்,

அவர் ஒரு சுயமரியாதை வீரர்.
பொது உடமைத் தோழர்.
திராவிட இன உணர்ச்சிக் காளை.

அடடா! அவர் எழுத்திலே என்னென்ன சுழற்சி! எத்துணை எழில்! என்ன வேகம்!

"ஆடைகட்டி வந்த நிலவோ?—கண்ணில்
மேடை கட்டி ஆடும் எழிலோ!"

—அமுதவல்லி படத்திற்கு அவர் எழுதியுள்ள அழகு வரிகள் இவை!

குழந்தை தேசிங்கு தாயின் மடியிலே வளர்கிறான். அதைக் கல்யாணம் எழுதிக் காட்டுகிற விதமே தனிதான்! சுவைக் கனிதான்!

"உறையிலிருக்கும் போர்வாள் போலே
அறையிலிருந்தான் தேசிங்கு
உலக வழக்கம் உணரும் வரைக்கும்—தாய்
மடியில் வளர்ந்தான் தேசிங்கு."

தேசிங்கு, வீரங் கொழிக்கும் குழந்தை என்பதை எவ்வளவு உணர்ச்சியுடன் கூறுகிறார் கல்யாணம்!

"மானம் பெரிது உயிர் சிறிது—இது
வழிவழி வந்த வழக்கமடி—இதில்
மாற்றம் நடந்தால் என் மார்பின் உதிரம்—நம்
மண்ணை மணப்பதும் உண்மையடி—என்
வண்ணக் கிளியே விடைகொடடி!"

இதுவன்றோ பாட்டு! இதுவன்றோ எழுச்சிப் பண்! இதை எழுதியவர் எங்கே?

"தங்கத்தூண் ஒன்று
குங்குமச் சேற்றில் சாய்ந்ததுபோல்
சாய்ந்தானே தேசிங்கு!"

—என எழுதினர்! அவரே அப்படித்தான் சாய்ந்தார்!

"ஏழையைப் புடிச்ச தொல்லை
எப்பதான் ஒழியும்?
எல்லாரும் சேர்ந்துகிட்டா
சொல்லாம ஒழியும்."

'குறவஞ்சி'க்குக் கல்யாணம் தீட்டிய கொள்கை வரிகள்! அள்ளக் குறையா அழகுப் பாடல்! இதோ....குறவஞ்சியில் இன்னும் சில வரிகள்:—

இந்த வசங்கெட்ட உலகம்
அழிபட்டு போகாமெ
வாழ்வதும் எப்படி சிங்கா—அது
மீள்வதும் எப்படி சிங்கா
மதிகெட்ட மனிதர்க்கு மதி தரும்
அறிஞன்
மாளா உழைப்பால் சிங்கி—

வளமான வார்த்தைகள், கல்யாணத்தின் பேனாமுனையை முத்தமிடத் துடித்து நிற்கும். அவரோ, எழுதியது போதும் என்று எழுதுகோலைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டார்.

பழுப்பு இலையாகிவிட்ட தந்தை—

பழமான தாய்—

இளங்கொடியாம் மனைவி—

தளிர்க் குழந்தை—

அண்ணன்மார் — ஆருயிர் நண்பர்—

உற்றார் உறவினர்—

இத்தனைக்கும் மேலாக கலையுலகத்தோர் அனைவரையும் தவிக்க விட்டுவிட்டுக் கல்யாணம் பிரிந்து விட்டார்.

இளமை குலையாத எழுத்துக்களை நம்மிடையே உலவிட விடுத்து— அவரும் இளமை குலையாமல்— நம் இதயங் குலைத்துப் போய் விட்டார்!

கண்களை மூடுகிறேன்; கல்யாணம் தெரிகிறார் — ஒளி தெரிகிறது!.

கண்களைத் திறக்கிறேன்; கல்யாணம் இல்லை—கலையுலகு இருட்டாயிருக்கிறது!

-மு. கருணாநிதி

நன்றியுள்ள இளைஞர்



[கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் எழுதத் துவங்குமுன் "வாழ்க பாரதிதாசன்!" என்று தலைப்பில் எழுதிய பின்னரே பாட்டெழுத சிந்திப்பார். அத்துணை நன்றியுணர்வு அவரிடம் நிரம்பிக் கிடந்தது. இது அவர் கையெழுத்து....]

இதுவரை...

கி. மு. 20-ம் ஆண்டின் துவக்கத்திலொருநாள். சோழப் பெருமன்னன் கரிகாலனும் பாண்டிய மன்னன் பெருவழுதியும் புகார் நகரிலே பவனி வந்தனர். சோழனைக் கொல்ல சதி ஒன்று நடப்பதைக் கண்டான் பாண்டிய நாட்டு வீரன் செழியன். சதிகாரனைத் துரத்திச் சென்று புலவர் காரிக்கண்ணனார் வீட்டருகில் போர் செய்து அவனை வேலுக்கிரையாக்கினான்.

போரில் காயமடைந்த பாண்டிய வீரனும் செழியனுக்கு காரிக்கண்ணனாரின் மகள் முத்துநகை சிகிச்சை செய்தாள். அப்போது அரசர் கூப்பிட்டனுப்புகிறார், புலவரை! புலவர் அரசவை சென்று இருபெரு வேந்தரையும் வாழ்த்திவிட்டுத் திரும்புகிறார்.

திரும்பியவர் கண்டதென்ன? செழியனைக் காணவில்லை. முத்துநகையோ மயக்கமுற்றுக் கிடந்தாள். மயக்கம் தெளிந்தபின் முத்துநகை சிவனடியார்கள் வேடத்தில் வந்த கூட்டம்தான் தன்னை மயக்கத்திலாழ்த்திவிட்டு செழியனைத் தூக்கிப் போனதாகத் தெரிவிக்கிறாள். புலவர், செழியனை எப்படியும் மீட்பதாகக் கூறிவிட்டுபடுக்கைக்குப் போனார். தந்தையின் செயல் முத்துநகைக்கு ஆச்சரியம் தந்தது!

நடுநிசியில் அவர் ஒரு யவனக் கிழவரை வரவேற்று நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தது அவளுக்கு சந்தேகத்தைக் கிளப்பிற்று. அந்த யவனக்கிழவர் தவறுதலாக விட்டுப்போன பதக்கத்தை எடுத்துப் பார்க்கிறாள். சோழனைக் கொலை செய்ய அலைகின்ற குறுநில மன்னனான இருங்கோவேளின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. தந்தை ஒரு துரோகியா—என்ற எண்ணம் அவள் நெஞ்சத்து மடியிலே வளர ஆரம்பித்தது.

சிவனடியார்கள் வேடத்தில் வந்த இருங்கோவேளின் ஆட்கள், தங்கள் சதிக்கு முட்டுக்கட்டையாயிருந்த செழியனை இருங்கோவேளின் மரமாளிகைக்குக்கொண்டு சென்றனர். 'சாவூருக்குப் போகும்வழி' — எனும் பயங்கர சிறையில் அவனை அடைக்கின்றனர்.

தந்தையின் பேரிலிருந்த சந்தேகம் முற்றி தாய்த் திருநாட்டின் மன்னனைக் காக்க, செழியனை மீட்க வீட்டைவிட்டு வெளியேறுகிறாள் முத்துநகை. நேரே மன்னனிடம் சென்று தன் இலட்சியத்தைக் கூறுகிறாள். ஒற்றர் வேலையை ஏற்றுக் கொண்டு, அரசனின் ஆசியுடன். ஆண் உடையில் வெளியேறுகிறாள்.

காட்டில் சுற்றியலைந்த முத்துநகை காட்டுச்சுனை ஒன்று கண்டு நீரருந்தினாள். அப்போது பார்த்தவர் மயங்கும் பேரழகி ஒருத்தி அங்குவரக் கண்டாள். ஓடிப்போய் ஒரு நீண்ட கல்லில் தூங்குவதுபோல் படுத்துக் கொண்டாள்.

அருகில் வந்த அந்தப் பருவச்சிட்டு, முத்துநகை கீழே விழுவதைத் தடுக்க ஓடிச் சென்று அவளைப் பிடித்துக் கொள்கிறாள்.

ஆண் உடையிலிருந்த முத்துநகையைக் காதலிக்கிறாள் அந்தப் பெண். ஆனால் முத்துநகையோ ஊமையாக நடிக்கிறாள். தாமரை என்ற தன் பெயரை மாத்திரம் கூறிய அந்தப் பெண் இவ்வாலிபன் கரிகால் சோழனைப் பழி வாங்க வந்திருப்பவன் — என்பதை மட்டும் சைகையால் அறிந்து கொள்கிறாள்.

அதற்குள் தோழிகள் அழைக்க, 'நாளை சந்திக்கிறேன்' — என்று கூறி விட்டு ஓடி விட்டாள் அந்தத் தாமரை. இருந்தாலும், முத்துநகை அவளைப்பின் தொடர்ந்து செல்கிறாள்.

ஆனால் வழியில் யவனக் கிழவர் முத்துநகையைப் பார்த்துத் தன் குதிரையைத் திருப்புகிறார். அவரிடமிருந்து தப்பிட ஒரு சிவனடியார் கூட்டத்தினுள் புகுந்து விடுகிறாள். ஆனால், புலிக்குப் பயந்து கொடுஞ் சிங்கக்குகையில் நுழைந்த கதையாகிவிட்டது. சிவனடியார் கூட்டத் தலைவர் முத்துநகை ஒரு பெண் என்பதை அறிந்து காமவயப்பட்டார். முத்துநகையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு உள்ளே நுழையும்போது வாளுடன் யவனக் கிழவர் நுழைந்து சிவனடியார் கூட்டத்துடன் பொருதுகிறார்.

இதுதான் சமயமென்று முத்துநகை ஆண் உடையை மாட்டிக் கொண்டு வெளியேறுகிறாள். வீடு வந்த அவள், உள்ளே யவனக் கிழவரும் புலவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அரண்மனை சென்று உதவி பெற்று யவனக் கிழவரைப் பிடிக்கப்படையுடன்வருகிறாள். ஆனால் வீடோபூட்டப்பட்டிருந்தது. 'தாமதித்ததால், துரோகி தப்பி விட்டான்'—என்று அரசனுக்கு ஓலை எழுதிவிட்டு காட்டுப் பக்கம் தன் குதிரையைச் செலுத்துகிறாள்.

பெருவழுதிப் பாண்டியர் செழியனை இழந்த மன வேதனையுடன் தன் நாட்டிற்குத் திரும்புகிறார்.

அப்போது இருங்கோவேளிடமிருந்து, 'என் நாட்டை எனக்குத் தந்துவிடு. இல்லையெனில் செழியனைச் சித்ரவதை செய்து மெல்ல மெல்ல கொல்லப் போகிறேம்'—என்ற ஓலை சோழனுக்கு வருகிறது. அதைக் கண்ட கரிகாலன் படைகொண்டு அவனை முறியடிக்க நினைக்கிறான். அங்கு வந்த புலவர், படையெடுப்பால் செழியன் உயிரோடு மீள்வானா— என்பதுபற்றி சிந்திக்கச் செய்கிறார். அப்போது முத்துநகையும் வந்துசேர, அவளிடம் தனிமையில் மிரட்டல் கடிதம்பற்றிய செய்தியைக் கூறுகிறான். தந்திரத்தைத் தந்திரத்தால் வெல்ல வேண்டும் என்று கூறிவிட்டு தன் குதிரையில் புறப்பட்டாள். முத்துநகை!

அவளுக்கு வேலையெல்லாம் அந்தக் காட்டுப்புறத்தில்தான். பாழ் மண்டபத்தையும் அதனருகிலுள்ள குளத்தையும் கண்ட முத்துநகை அதிலிறங்கிக் குளிக்கிறாள்.

அவளை மறைவிலிருந்து பார்க்கிறது ஒரு முரட்டு உருவம். குளித்துக் கரையேறின அவளை உணவு உண்ண அழைக்கிறான் அவன்.

உணவு உண்ணும்போது,தான் ஒரு விறகு வெட்டியென்று கூறிக் கொள்கிறான். ஆனால் அவனுடைய எடுப்பானமுகமும். முறுக்கிவிட்ட பெரிய மீசையும், தடந்தோள்களும், யாரையும் கவரக்கூடிய ஒளி படைத்த கண்களும், கட்டான தேகமும் முத்துநகையின் உள்ளத்தைக் கவர்ந்தன.

ஆனால் அவன்தான் குறுநில மன்னன் இருங்கோவேள் என்பது அவளுக்குத் தெரிய நியாயமில்லை! இருங்கோவேள் இன்பச் சேட்டைகள் பல செய்தான். அத்தனையும் அவள் பொறுத்துக் கொண்டாள். அவ்விளையாட்டால் விரலில் ஏற்பட்ட காயத்திற்குப் பச்சிலை தேடிப் போனான் இருங்கோவேள். சொல்லாமற் கொள்ளாமல் பறந்து விட்டாள் முத்துநகை.

பச்சிலையுடன் திரும்பி வந்த இருங்கோவேள் முத்துநகை இல்லாதது கண்டு திடுக்கிட்டான். நேரே தன் மரமாளிகைக்குச் சென்றான்.

சோழ நாட்டுக் கைதிகளை— குறிப்பாக செழியனைத் துன்புறுத்தும் முறை இருங்கோவேளின் தங்கையான தாமரைக்குப் பிடிப்பதில்லை. தன் கருத்தைத் துணிந்து தன் தமையனிடன் கூறுகிறாள். அதோடு தன் அண்ணிக்கு மருத்துவம் பார்க்க ஊமை வாலிபனை அழைத்து வரவும் அனுமதி கேட்டாள். தன்னை அந்த வாலிபன் பார்க்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி தருகிறான் இருங்கோவேள்.

தாமரை வருவாள் என அருவிக்கரையில் நெடுநேரம் காத்திருந்தாள் முத்துநகை. தனிமை அவளை என்னென்னவோ எண்ணச் செய்தது.

> கடந்த வாரம் சிதம்பரம் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது ஏற்பட்ட உடல்நலமின்மையின் காரணமாக "ரோமாபுரிப் பாண்டியன்" தொடர்கதை இடம்பெற இயலாமற் போய்விட்டது. அடுத்த இதழில் வழக்கம்போல் தொடர்கதை தொடரும்.
>
> —ஆசிரியர்.

மரம் வெட்டிக் கொண்டிருந்த இருங்கோவேளைச் சந்திக்கிறாள். அப்போது மழை வந்துவிடவே அருகிலிருந்த மண்டபத்திற்குள் இருவரும் செல்கிறார்கள்.

முத்துநகை ஆண் அல்ல; பெண் என்பது சிறிது நேரத்தில் தெரிந்து விடுகிறது. காதல் மலர்கிறது!

இருங்கோவேள் தான் பெருவழுதிப் பாண்டியரின் ஒற்றனென்றும் — வீரபாண்டிதான் தன் பெயர் என்றும் கூறுகிறான்! முத்துநகை. அவன் பேச்சை நம்புகிறாள்.

இருங்கோவேளின் இரகசிய மாளிகைக்கு தாமரை முன்பே அழைத்திருந்ததைக் கூறுகிறாள், முத்துநகை. பின்னர் விடைபெற்றுக்கொண்டு சென்று தாமரையை சந்தித்தாள்.

தாமரையைக் காதலிப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை — என்ற நிபந்தனையின் பேரில் இருங்கோவேளின் இரகசிய மாளிகைக்கு முத்துநகையை இட்டுச்சென்றாள் தாமரை!

இருங்கோவேளின் நோய் வாய்ப்பட்ட மனைவியைக் காணுகிறாள் முத்துநகை. அவளுக்கு சிகிச்சை செய்வதாக நடிக்கிறாள்!

அப்போது, 'சாவூருக்குப் போகும் வழி'—என்னும் பயங்கரச் சிறையில் அடைபட்டுக் கிடந்த செழியன் எனும் வாலிபன் மூர்ச்சையற்றுக் கிடப்பதாகச் சேதி வந்தது. தாமரை ஓடினாள், சிறைக் கோட்டத்திற்கு.

செழியனின் மயக்கத்தை வெகு அக்கறையுடன் போக்கினாள். கண் விழித்த செழியன் அவளை நன்றியறிதலுடன் பார்த்தான், அவள் இருங்கோவேளின் தங்கை—என்று அறிந்து திடுக்கிட்டான்.

ஆம்; இவளை முன்பொரு முறை பார்த்திருக்கிறான். நேரிலல்ல; ஓவியத்தில்! பாண்டியன் பெருவழுதி, செழியனுக்குத் திருமணம் முடித்துவைக்க முனைந்திருந்த காலை, பாண்டிய மன்னருக்கும், செழியனுக்கும் பிடித்த ஓவியமாய் விளங்கியவள்தான் இந்தத் தாமரை — என்று அறிந்தான்.

அப்போது இருங்கோவேள் உள்ளே நுழைந்து ராஜதந்திர நாடகம் ஒன்று ஆடுகிறான். "செழியன் தன் கைப்படவே ஒரு ஓலை எழுதித்தர வேண்டும்! அந்த ஓலை, சாதாரண ஓலையன்று! திருமண ஓலை.

"கீழ்க்கண்டபடி அதை எழுத வேண்டும்.

"பாண்டியர் பெருவழுதிக்கு செழியன் வணக்கம். என்னை இருங்கோவேளிடமிருந்து மீட்பதற்கு முயற்சிப்பதாகக் கேள்விப்பட்டேன். தேவையில்லை. தாங்கள் என்னிடம் மறைத்து வந்த மணமகளை யாரென்று புரிந்து கொண்டேன். இருங்கோவேளின் தங்கை தாமரைக்கும் எனக்கும் திருமணம். வேளிர்குடியில் புது உறவு. பாண்டியருக்கு நான் பகைவனாக வேண்டிய சூழ்நிலை. என்னை மறந்துவிடுக!!" —என்று எழுதத் தூண்டுகிறான் இருங்கோவேள்!"

சித்ரவதைக் கூடத்திலிருந்து மாற்றுகிறேன் —, என்ற நிபந்தனையோடு அதனை எழுதி வாங்கிக் கொண்டான் குழப்பநிலையிலிருந்த செழியனிடமிருந்து.

அந்த ஓலையைக் கொண்டு சென்று இருங்கோவேளைப் பிடிக்கப் படையெடுத்துவரும் பாண்டியர் தளபதியிடம் காட்டி திரும்பிப் போகச் செய்திட வேண்டும் — என்ற எண்ணத்தில் கொடுங்கோல் என்பவனிடம் ஓலை தரப்படுகிறது.

இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த முத்துநகை அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவள் முதல் நாள் உட்கார்ந்திருந்த அருவியோரம், அந்த ஓலை கொண்டு செல்லும் வேளிர்குடி வீரன் உட்கார்ந்திருந்தான்.

அவனுடன் மெதுவாகப் பேசி, புறப்பட்டு வரும் பாண்டியர் படையை நிறுத்த அவன் ஓலை கொண்டு போவதை அறிந்து கொண்டாள். பேச்சு வாக்கில் அவனுடைய வாளை வாங்கிப் பார்த்துக் கொண்டேயிருந்த அவள் திடீரென வாளை வீரனின் நெஞ்சில் நுழைத்து விட்டாள். உடனே அவனுடைய பிணத்தைப் புதரில் மறைத்து வைத்தாள்.

எங்கு செல்வதென்று தெரியாது திகைத்த முத்துநகை வீரபாண்டி நிற்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள்.

அவனிடம் நடந்தது முழுவதையும் கூறினாள்; அதோடு ஓலையையும் தந்தாள்.

யாருடைய அழிவுக்காகப் பாடுபடுகிறாளோ, அவனுடைய கையிலேயே அந்த ஓலையை மகிழ்ச்சியுடன் தருவதைக் கண்டு இனந்தெரியாத உணர்ச்சியால் மெல்லச் சிரித்தான், இருங்கோவேள்.

கரிகாலரிடம் இருங்கோவேளைப்பற்றித் தான் அறியவேண்டிய இரகசியங்கள் நிறைய உண்டு—என்றும் அவரைச் சந்திப்பதற்கு வழிசெய்ய வேண்டும்—என்றும் முத்துநகையைக் கேட்டுக்கொண்டான் இருங்கோவேள். அதற்குச் சம்மதித்து கரிகாலனைப் பார்க்கப் புறப்பட்டாள் முத்துநகை.

தன் மாளிகை திரும்பிய இருங்கோவேள் வந்து கொண்டிருக்கும் பாண்டியர் படையை ஓலையைத் தந்து தடுத்து நிறுத்திட வேறோர் ஆளை அனுப்புகிறான்.

முத்துநகையை எதிர்பார்த்து நின்ற தாமரையிடம் இருங்கோவேள், முத்துநகை ஆணல்ல, ஆண் வேடத்திலிருக்கும் பெண் என்பதை அறிவிக்கிறான். தாமரை, ஒரு பெண்ணைப் போய்க் காதலித்தோமே—என்று எண்ணி எண்ணி மனமொடிகிறாள்.

கரிகாலனைக் கண்டாள் முத்துநகை. நடந்தவைகளைக் கூறினாள். மன்னன் திடுக்கிட்டான்; ஆச்சரியத்தில் ஆழ்ந்தான்!

வீரபாண்டி—எனும் 'பாண்டிய ஒற்றன்' கரிகாலனைச் சந்திக்க விரும்பும் சேதியைக் கூறுகிறாள். கரிகாலனும் அதற்கு ஒப்புக் கொள்ளுகிறான்.

படையெடுத்து வரும் பாண்டியரின் தளபதியை சந்தித்து கரிகாலனிடம் அழைத்து வரப் புறப்படுகிறார் காரிக்கண்ணனார். அப்போது புலவருக்கு ஒரு திடுக்கிடும் சேதியை கூறுகிறான் கரிகாலன்.

ஆண் வேடத்தில் ஒற்றனாக நடிக்கும் முத்துதான் அவருடைய காணாமற் போன மகள் முத்துநகை — என்று அறிவிக்கிறார். வியப்பும், ஆனந்தமும் பெருகிட பாண்டியர் தளபதியை சந்திக்கப் புறப்படுகிறார் புலவர்.

பாண்டியர் தளபதியான நெடுமாறனே செழியனின் திருமண ஓலை கண்டு திகைத்துச் சீறி நிற்கிறான். அப்போது அங்கு சென்ற புலவர், செழியனின் நிலை அறிகிறார். நெடுமாறனை புகாருக்கு அழைக்கிறார். அவன் தயக்கத்துடன் புறப்பட்டு வரும்போது ஒரு புதருக்கிடையில் திடீரென இறங்கி வாளைப் பாய்ச்சுகிறான் திருமண ஓலை கொண்டு வந்த இருங்கோவேளின் ஆள் பிணமாகச் சாய்ந்தான்! ஓலை கொடுத்த பின் என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்த அவனைக் கொன்ற பாண்டியர் தளபதியின் திறமையை உள்ளூர வியந்தார் புலவர்.

சோழவேந்தனைச் சந்திப்பதற்குப் பாண்டிய நாட்டுத் தளபதியைத் தந்தை அழைத்துவரும் அதே நேரத்தில், பாண்டி நாட்டு ஒற்றனும் வீரபாண்டியை சோழனிடம் அழைத்துச் செல்லும் நோக்கத்துடன் மகள், காட்டினிடையேயுள்ள பாழ் மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள். அவள் உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் இந்த இளம் வயதில்—அதுவும் பெண்ணாகப் பிறந்த ஒருத்தி—பிறந்த நாட்டுக்காகப் பெரும் பணியாற்றுவதை நினைத்து நினைத்துத் தனக்குத் தானே பெருமை கொண்டாள். வீரபாண்டியையும் சோழரையும் சந்திக்க வைத்து இருங்கோவேளை எதிர்க்கும் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டால் செழியன் விடுதலை சுலபமாக நடந்துவிடும். பின்னர் வீரபாண்டிக்கும் தனக்கும் திருமணம்!

இப்படியெல்லாம் சிந்தனைகளை ஓடவிட்டவாறு புலவரின் மகள், தன் காதலன் இருங்கோவேளைக்கிழ வேடம் பூணச்செய்து அழைத்து வருகிறாள் கரிகாலன் அரண்மனைக்கு!

நெடுமாறனுடனும் புலவருடனும் பேசிச் செழியனைப் பற்றியும் அவன் விடுத்த திருமண ஓலை பற்றியும் பேசிக் கொண்டிருக்கும் போது; அரசனுக்கு திடீரென ஒரு சந்தேகம் தோன்றுகிறது.

வீரபாண்டி — என்ற பெயர் கொண்ட ஒற்றன் பாண்டியர் படையில் உண்டா—எனக் கேட்கிறார். பாண்டியர் தளபதி அப்படி யாரும் இல்லையென அறுதியிட்டுக் கூறினான். உடனே முத்துநகை ஆபத்தில் சிக்கியிருப்பதாக கரிகாலன் உள்ளூர உணர்கிறான் — தளபதியை தனி மாளிகையில் நாளைவரை தங்கும்படி கேட்டுக்கொண்டு அவனை வழியனுப்பினான். புலவரையும் கூப்பிடடனுப்பும்போது வரச் சொல்லிவிட்டு முத்துநகையை எதிர்பார்த்திருந்தான், மன்னன்!

முத்துநகையும் இருங்கோவேளும் புகார் அரண்மனையில் புகுந்தனர்! மாளிகை வெளிமுற்றத்தில் அவர்கள் இருவரையும் உட்காரச் சொன்னான்; மன்னரின் மெய்காப்பாளன், முத்துநகையை முதலில் அரசர் பார்க்க விரும்புவதாக அழைத்தான்.

மன்னன் அவளைக் கண்டதும், 'அழைத்து வந்தாயா வீரபாண்டியை?' — என்று கேட்டான் அழைத்து வந்ததாக அவள் தெரிவித்தபின், மன்னன் பரபரப்படைந்தான். தன் உத்திரவின்றி யாரும் வெளியே போகக்கூடாது என கோட்டைக் காவலருக்கு கடுமையான உத்திரவைப் போட்டான். ஒற்றனும் கரிகாலனும் சந்திக்கும் இடத்தை ஒழுங்குபடுத்த மெய்காப்பாளனை அனுப்பிவிட்டு, புலவரை அழைத்துவர ஆள் அனுப்பினான். பின்னர், முத்துநகை உட்கார்ந்திருந்த கூடத்திற்குத் திரும்பினான்.

[தொடரும்]

முகவரி மாற்றம்
"மன்றம்"

•

"மன்றம்" அச்சகம் கீழ்க் கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. "மன்றம்" இதழுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மணியார்டர்கள் முதலியன புது முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

"மன்றம்"
49, வேளாளத் தெரு,
அமைந்தகரை,
சென்னை-29.

ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு அனுப்பப்படும் தனிப்பட்ட கடிதங்கள்.

இரா. நெடுஞ்செழியன்,
8, லட்சுமி டாக்கீஸ் தெரு,
சென்னை-30.

என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ரெயில்வே தொழிலாளர் மாநாடு
விழுப்புரத்தில்
அக்டோபர் 25—ல் நடைபெறும்.

✻

நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.
திரு. ப. உ. சண்முகம் எம். எல். ஏ.
,, இரா. தர்மலிங்கம் எம். பி.
,, தி. வ. ஆனந்தன்
,, ஜி. பராங்குசம்
,, இராகவானந்தம்

கலந்து கொள்வர்! அனைவரும் திரண்டு வாரீர்!

கன்னித் தமிழ் அழியட்டும்! கல்லறைகள் மிஞ்சட்டும்!!

போர்முரசம் தட்ட வேண்டிய நிலை வந்து விட்டது! சோர்வுற்ற இதயத்திலே சுடு நெருப்பென இரத்தம் பாய வேண்டிய வேளை வந்துவிட்டது! போர் மறவர் ஆர்த்தெழுந்து பொல்லாங்குக்காரர்களின் வெற்றி மேட்டைத் தூர்த்தெறிந்துவிட காலம் கனிந்து விட்டது!

ஆம்; நாளுக்குநாள் வடக்கரின் துடுக்கு. அறுத்து விட்ட மாடென உரிமைச் செம்பயிரில் மேய வந்து விட்டது! அந்த இரட்டை மாடுகளின் தோல் கிழித்து, நரம்பு பிரித்து, எம் வெற்றி முரசுக்குத் தோலாகவும் வாராகவும் ஆக்கினாலன்றி, உள்ளத்திலே தேக்கி வைத்த விடுதலை ஆர்வம் தணிந்திட வழி கிடையாது!

'இவ்வளவு ஆத்திரம் கொள்ள என்ன நடந்து விட்டது? நேத்திரத்தை மூடிக் கொள்ளாதீர். நேர்மை வழி தெரியாது!' — என்று உள்ளொன்று வைத்துப் புறம் பேசும் 'சந்துமுனை சிந்து பாடி'களுக்கு கூறுகிறோம்!

என்ன நடக்கவில்லை?

ஆளவந்தார் இன்று திருந்துவார் — நாளை திருந்துவார் — என்றிருந்தோம்! ஆனால் விநாடிக்கு விநாடி வருந்துவோர் நாமாகத்தான் இருக்கிறோம்!

தமிழ் மொழி தீயில் வெந்த உணவாக இந்திப் பருந்துக்கு விருந்தாகிக் கொண்டிருக்கிறது!

தமிழ் மக்கள் நுகத்தடி ஏந்திய மாடுகளாய் வடவர்களின் அரசியல் கடனாளிகளாய் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்ப் பண்பாடு புண்பட்டு, புழுத்து, மக்கி, மறைந்து, மண்மேடாகி வருகிறது!

இதையெல்லாம் இதயம் வலியெடுக்க, வாய் நீர் வற்றிட, விலா எலும்பு 'விண்விண்' —என்று தெறித்திடப் பேசினோம்; எழுதினோம், நாளெல்லாம்!

கண்ட பயன் என்ன? இன்னும் எம் சுதந்திரத்தை மென்று, தின்று உண்ட மயக்கத்தால் ஆதிக்கத் திண்டு தலையணையிலே சாய்ந்து கிடக்கிறான் வடவன்! பண்டைய பெருமையோடு நடமாடும் சதைப் பிண்டமாய் உலவுகிறான் தென்னாட்டான்!

இனி எழுத்துக்கும் பேச்சுக்கும் மேலே ஒன்று தேவை! செயல்! செயல்! செயல்! திராவிடத்து வயல்களிலே புகுந்துவிட்ட 'டில்லி ஆதிக்கக் கடாக்களை' வெட்டிப் பலிகொடுக்கும் அறப்போராட்டம் தேவை!

ஆம்; போராட்டம் தேவைப்படும் காலம் வந்து விட்டது! அந்தக் காலம் கனியும் நேரத்தைத் தங்களை அறியாமலேயே துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், கங்கைச் சமவெளிக்காரர்கள்!

பெரும்பான்மையைக் காட்டி இந்தி மொழி இந்திய தேசிய மொழி என்றார்கள் முன்பு!

இலக்கிய வளம் இல்லை! பெரும்பான்மையும் இல்லை' — என்றார்கள் அதை எதிர்ப்போர்!

ஆனால் இன்றோ, 'இந்தியில் இலக்கிய வளம் ஏராளம் உண்டு!—என்று திரித்துக்கூறிட முன் வருகிறார் இந்திப் பிரியர்களின் சார்பிலே, இந்தியக் குடியரசுத் தலைவர், ராசேந்திரப் பிரசாத்!

அவராவது இல்லாததைச் சொல்லி, பொல்லாதவர்களின் மொழியைப் பரப்பிட முயற்சிக்கிறார்.

ஆனால் பண்டித நேருவோ, 'தமிழர்களே! உங்களுக்குத் தன்மானம் உண்டா? தனியினம் — என்ற எண்ணம் உண்டா? தனிநாடு — என்ற நினைப்பு உண்டா? தனியரசாகிடும் இலட்சியம் உண்டா?' —என்று ஏளனம் பேசிடும் வகையிலே சொற்களை அள்ளி வீசுகிறார்.

'தமிழின் பெருமையைத் தனியாகப் பாடாதீர்கள். தெலுங்கின் பெருமையைத் தனியாகப் பாடாதீர்கள். தமிழ் நாட்டின் புகழைத் தனித்துப் பேசாதீர்கள்! தெலுங்கு நாட்டின் புகழைத் தனித்துப் பேசாதீர்கள்!"—கூறுகிறார் பண்டிதர்!

சொற்களா இவை? சுயமரியாதையின்மீது விடும் சுடுகணையல்லவா? தன்மானம் உண்டா —என்று தட்டிப் பார்க்கும் கேலிச் சொற்களல்லவா?

தமிழ் மொழியின் பெருமை பாடக் கூடாதாம்!

வானம் அளந்தது அனைத்தையும் அளந்திட்ட வண் மொழியின் புகழைப் பாடக் கூடாதாம்! ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசைகொண்டு வாழ்ந்த மொழியின் பெருமை பேசக் கூடாதாம்! எம் முந்தையர் ஆயிரம் இலக்கியம் படைத்த மொழி பற்றிப் பெருமை பாடக் கூடாதாம்! எம் தாய் தன் பாலுடன் குழைத்தூட்டிய மொழிபற்றிய புகழ், பேசக் கூடாததாம்! தண்ணீர் கொள்ளை கொண்டும் தன் புகழ் குறையாதது எனப் பேராசிரியர்கள் போற்றும் தமிழின் கன்னித் தன்மைபற்றிக் கூறக் கூடாதாம்!

தாய்மொழி நடமாடும் தமிழ் நா கொண்டவர்களே! உங்கள் ரத்த நாளங்கள் புடைக்கவில்லையா? நரம்புகள் துடிக்கவில்லையா? — 'எம்மை இப்படி இகழ்வோரின் கூட்டுறவை உடைத்தெறிய, 'படை யெங்கே? பகை எங்கே?' — என்று கூறிட முந்தவில்லையா?

இன்னும் உணர்ச்சி ஊற்றெடுக்காதவருக்குப் பண்டித நேருவின் வேறொரு வார்த்தையைக் காணிக்கையாக்குகிறோம்!

'வெளிநாடுகளிலே தமிழன்— என்று கூறினால் வரவேற்புக் கிடைக்காது. தெலுங்கன் என்று கூறினால் பாராட்டு இருக்காது!'

—பண்டித நேருவின் பேச்சுத்தான் இதுவும்! 'ஏன் வரவேற்புக் கிடைக்காது என்று கேட்பார் இருக்க மாட்டார்' என்ற எண்ணத்திலே பேசுகிறார்.

'தனி நாடாக இருந்தால் தமிழனுக்கு எங்கும் வரவேற்புத்தான்!"

—என்று எதிரடி கொடுக்க ஒருவரும் இருக்கமாட்டார் என்ற நினைவிலே பேசுகிறார்!

இவ்வளவு அவர் பேசிடவும், உயிரனைய தமிழையும் தமிழகத்தையும் ஏசிடவுமான நெஞ்சுத் துணிவு அவருக்கு எப்படி வந்தது?

அடிமைகளாய் — ஆதிக்க அடிவருடிகளாய் அவர்கள் காலடியிலே வீழ்ந்து கிடக்கிறவரை— காவடித் தூக்கிப் பிழைக்கும் கழிசடை எண்ணம் இருக்கும் வரை — திராவிடம் அடிமைத் தளையிலே சிக்குண்டு கிடக்கும்வரை இந்த ஆதிக்கப் பேச்சு இருக்கவே செய்யும்!

எனவே ஆதிக்கப் பேச்சு அழிய வேண்டுமானால், நம் தன்மானம் இனியும் புண்படாமல் இருக்க வேண்டுமானால், பொருளாதார, அரசியல், சமூக, சமத்துவத்தோடு வாழும் எண்ணம் இருக்குமானால் — சூடு, சொரணையோடு வாழ நினைப்பிருக்குமானால் மிக விரைவில் போராட்டம் தேவை!

நாடிபிடித்து நோயறிந்து நல்ல மருந்து தரும் மருத்துவனைப் போல தி. மு. கழகம் போராட்டம் தேவையென்று உணர்ந்து மாவட்ட மாநாடுகளில் குரல் எழுப்பியிருக்கிறது. போராட்ட வீரர்களின் பட்டியல் தாரீர் என்று!

பட்டியல் தயாராவதற்கு இம்மாதிரி பேச்சுகள் துணைபுரிகின்றன 'தூரப் போகாதே; போராட்டமே; துரிதமாகவா!'— என்னும் வகையில்!

தூங்கும் புலியின் வாலை மிதிக்கிறார்கள்! கேலி மொழி யென்னும் காந்தி முள்ளினால் அலைதக் குத்துகிறார்கள்!

படுத்த புலி எழுந்து விட்டால் போராட்டம்தான்! பதுங்கியிருந்த உணர்ச்சியெல்லாம் ஒன்று சேரும்! பாரெல்லாம் போர்ப் பாட்டு முழக்கம் கேட்கும்! வைரமணித் தோளெங்கே? வாளெங்கே? விடுதலைக்கு வழி காட்டும் களம் எங்கே? குருதி வடித்திடும் தியாகக் குளம் எங்கே? — என்று புறப்படுவார், மறக்குலத்து மாவீரர்! சாயாத சுதந்திர எண்ணமும் பதவிக்குக் காயாத தியாகமுமே படைக்கலனாகக் கொண்ட இந்தப் படையைத் தடுத்து நிறுத்திடும் சக்தி பெற்ற தடையில்லை!

போராட்டம் என்றதும் நம் மனக்கண் முன்னே போராட்டக் காட்சி தோன்றுகின்றது!

தம்முடைய சிரத்தை அறுத்துக் கொடுத்தோர் — கரத்தைக் காணிக்கைப் பொருளாக்கினோர், பிணமாக மரத்திலே தொங்கியவர்கள் — துப்பாக்கிக் குண்டேந்தி தரையிலே சாய்ந்தோர் — தடியடிபட்டுக் காயமுற்றோர் வருகிறார்கள்!

பெரும் கூட்டம் வருகிறது: தமிழச் சிங்கக் கூட்டம் வருகிறது! பஜனைப் பாடலல்ல அதன் பாட்டு! போர் மறவரின் பாட்டு! அவர்கள் தட்டுவது ஜால்ரா அல்ல! கேடயங்களைத் தட்டுகிறார்கள்! 'கன்னித் தமிழ் வாழ்க'—என்று கூவுகிறார்கள்!

எதிரே வடவரின் கூலிப் பட்டாளம்! தோட்டாக்கள் நிரம்பிய துப்பாக்கிகள்! பீரங்கிகள்! ஒரேயடியாக எட்டாயிரம்பேர் ஈரலைப் பிளந்திடும் குண்டுகள்! இன்னபிற ஆயுதங்கள்!

இருந்தாலும் கவலையில்லை! கழகத்தின் ஆணைவரும்; கன்னித் தமிழ் காக்கப் புறப்படுவோம்! அடிமையாய் இருந்து நிமிடத்துக்கு நிமிடம் நச்சுச் சொல் கேட்டு சாவதைவிட, உரிமை எரிமலையென முழங்கி சுடுகாட்டுச் சாம்பலானாலும் பரவாயில்லை! அந்தச் சாம்பலிலும் தமிழ் மணந்தால் போதும்! கயவர்களின் பிடியில் கன்னித் தமிழின் மானம், வெறிச்சொற்களால் அடியுண்டு கன்னிப் போவதைவிட அது எம்மோடு அழியட்டும்!

தமிழே! தமிழகமே! சீக்கிரம் உங்களைக் காக்கப் புறப்படுகிறோம்! நீங்கள் அழிந்தால் நாங்கள் மிஞ்சோம்! ஆனால் உங்கள் பெயரை வாழ்த்திக் கொண்டு எங்கள் கல்லறைகள் மிஞ்சும்!

— அடியார்

தூத்துக்குடித் தேர்தல்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

★

தூத்துக்குடித் தேர்தல் பற்றிப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிடுகிறார்.

"நான் தூத்துக்குடித் தேர்தல் நிலையைப் பற்றி, தூத்துக்குடி கழகத் தோழர்களிடம் கேட்டறிந்துகொண்டு வந்துள்ளேனேயல்லாமல் எந்த முடிவுக்கும் வரவில்லை. முடிவு எதனையும் எந்தப் பத்திரிகை நிருபர்களிடத்திலும் கூறவில்லை. தலைமைச் செயற்குழுவின் கருத்து அறிந்துதான் தூத்துக்குடித் தேர்தலில் கழகத்தின் பங்கு பற்றி முடிவு செய்ய இருக்கிறேன். எனவே பிற பத்திரிகைகளில் வெளிவரும் வதந்திகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டாம் என்று கழகத் தோழர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்."

சிறுகதை

மதியத்தில் மையிருட்டு!

மாறன் எம்.ஏ.

புகைவண்டி நிலையத்தைப் போல இந்த உலகத்திலே ஒரு சுவையான பொருட்காட்சி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

எழுத்தாளனுக்கு அது கற்பனையின் நாற்றங்கால்! சிந்தனையாளனுக்கு அது தத்துவச் சுரங்கம்!

உங்களுக்கு எப்படிப்பட்ட உவமைகள் வேண்டும்? எல்லாம் அங்கே கிடைக்கும்!

வாழ்க்கைப் பாதையைப்போல சிக்கலான இருப்புப் பாதைகள்! அதிலே புத்திசாலிகள் தக்க சமயம் அறிந்து வாழ்க்கை வண்டியை நகர்த்திக் கொண்டு போகிறார்கள். காலம் அறியாத முட்டாள்கள் விபத்துகளைத் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டு அழிகிறார்கள்!

அதோ, அந்த சிற்றுண்டிசாலையைக் கவனித்தீர்களா?, ரயில் வருவதற்கு முன்பு அங்கே ஒரு ஆளைக் காணோம். கடைக்காரன் தூங்குகிறான். ரயில் வந்ததும்...? அவனுக்கு ஏதோ பத்துக் கைகள் இருப்பதைப் போல அவன் பணியாற்றுகிறான். மின்னல் வேகத்திலே காரியம் நடைபெறுகிறது. வாலிபம் என்கிற ரயில் வரும்போது மனிதனும் இப்படித்தானே இருக்கிறான்?

இருக்கின்ற கொஞ்ச நேரத்திலே அதிக வியாபாரம் நடத்த வேண்டுமே—என்கிற ஆசையில் அந்தக் கடைக்காரன் சிலருக்கு அதிகமாகப் பாக்கிச் சில்லரையைக் கொடுத்து விடுவான்! வாலிபத்திலும் இப்படித்தானே நடக்கிறது? இளமை அழிவதற்குள் உலகை அனுபவிப்பதற்காக அவனும் இப்படித்தானே கண்மண் தெரியாமல் தவறுகளைச் செய்து விடுகிறான்?

ஒருமுறை குற்றம் புரிந்தவர்கள் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியுமென்று நினைக்கிறீர்களா? எப்படி முடியும்? அதோ, அந்த டிக்கட் வாங்காத பிரயாணியைப் பாருங்கள்! அவனைப்போல அவர்களும் போய்ச் சேர வேண்டிய சாவுருக்கு அமைதியில்லாமல், பயத்துடன் செல்லவேண்டியதுதான்!

இந்தப் புகைவண்டி நிலையத்தில் அரசியல் கருத்துகள் உற்பத்தியாக முடியுமா — என்று கேட்கிறீர்களா? ஏன் முடியாது? அதோ பாருங்கள்—அந்த மார்வாரி, நான்கு பேர் உட்கார வேண்டிய இடத்திலே சொகுசாக சாய்ந்து கொண்டு மற்றவர்களுக்கு இடமளிக்காமல் இடக்கு செய்கிறான்! இதை நேரடியாக அனுபவிக்கிற பாமரன்கூட அறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்காமல் வடநாட்டான் ஆதிக்கத்தைப் புரிந்து கொள்வானே!

—இப்படி என் சிந்தனையை ஓடவிட்டவாறே நான் 'போட் மெயி'லில் ஏறி உட்கார்ந்தேன்!

என் மனம் ஒரு நிலையில் இல்லை. ஏனென்றால் திருமணமே வேண்டாமென்று நான் வீட்டிலே சண்டை போட்டு விட்டு வந்திருக்கிறேன்.

ஏன்; ஏதாவது காதல் விவகாரமா? சே! சே! காதல் செய்வதற்கு எங்கே நேரமிருக்கிறது?

பின் திருமணத்தின் மீது வெறுப்பு ஏற்படுவதற்குக் காரணம்?

பாதாம் அல்வா ,சுவையாகத்தான் இருக்கும். ஆனால் சிலர் இனிப்பே வேண்டமென்று அதை வெறுப்பதில்லையா?

— அந்த நேரம்தான் ரயில் புறப்பட்டது. ஜன்னலை விட்டு நானும் தலையை வெளியே நீட்டினேன். யாரோ ஒருவர் கையிலே ஒரு பையோடு ரயிலைப் பிடிப்பதற்கு ஓடோடி வந்தார். பாவம், முடியவில்லை! சிறிதுதூரம் ஓடிவந்த பிறகு தன் தோல்வியை ஒப்புக் கொண்டு நின்று விட்டார்!

—இப்படி நேரங் கழித்துப் புறப்பட்டு, தவறைத் தங்களிடமே வைத்துக் கொண்டிருக்கும் அவரைத்தானே உலகம் 'அதிர்ஷ்டக்கட்டை' என்று அழைக்கிறது!

சே! சே! மறுபடியும் சிந்தனையா? தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டேன்! எதிரே என் கண்ணோட்டம் சென்றது.

என்ன விந்தை! என் கண்களையே நம்பமுடியவில்லை. ஆமாம்; அழகுக்கு உருவம் கொடுத்தது போன்ற ஒரு பெண் என் எதிரே உட்கார்ந்திருந்தாள்!

தனியாகவா பிரயாணம் செய்கிறாள்? இல்லை. பக்கத்திலே சுமார் ஐம்பது வயதுள்ள ஒரு பெரிய மனிதர்—அந்த அழகுச் சிலையின் தந்தை என்று நினைக்கிறேன்—உட்கார்ந்திருந்தார்!

அந்தப் பெண் மிகவும் எளிமையான உடை அணிந்திருந்தாள். 'என் அழகை ரசிக்க வேண்டியது எனக்கு வரப் போகும் கணவன்தான'—என்று அறிவிப்பதுபோல் அவள் புடவையை இழுத்துப் போர்த்துக் கொண்டிருந்தாள்!

அவளைக்கண்டதும் திருமணத்தைப்பற்றிய என் கருத்துக் கோட்டையே தகர்ந்து தூள் தூளாகும் நிலை அடைந்ததை என்னால் உணரமுடியாமல் இல்லை.

'இப்படியொரு அழகி உனக்கு மனைவியாவதற்குக் கொடுத்து வைக்க வேண்டுமே!'—என் இதயத்தின் மூலையில் இந்தக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

ஆமாம்; அழகும் குணமும் கூடப் பிறந்தவை என்று உனக்கு யார் சொன்னார்கள்?—இந்தக் கேள்வியும் தோன்றாமல் இல்லை.

அந்த நேரம்தான் அந்த வயோதிகர்—அவள் தந்தை—வெறும் வாயை அசைத்துக் கொண்டிருந்தார். இதைக் கவனித்த அழகி—இதைத் தவிர அவளுக்குப் பொருத்தமான பெயர் வேறு என்ன இருக்கமுடியும்?—வெற்றிலைப் பெட்டியை எடுத்து, வெற்றிலை பாக்கு தயார் செய்து அவரிடம் கொடுத்தாள்!

—குறிப்பறிந்து பணியாற்றும் இந்தத் தன்மை எனக்கு வாசுகியை நினைவுபடுத்தி, அவள் குணத்திற்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தது.

"உம்....நீங்கள் எதுவரைக்கும் போகிறீர்கள்?" — மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தேன்!

"எழும்பூருக்குத்தான், தம்பி!" —கிழவர் பதிலளித்தார்.

"ஓகோ; எழும்பூரில்தான் உங்கள் ஜாகையா?"

"இல்லை, தம்பி! புரசைவாக்கத்தில் இருக்கேன்!"

"புரசையா? அங்கேதான் என் 'பிரண்டு'கூட இருக்கான். அங்க நீங்க எந்தத் தெரு?"

"வாஞ்சிலிங்கம் தெரு!"

"வாஞ்சிலிங்கம் தெருவா? அங்கே பத்தாம் நம்பர் வீட்டில்தான் அவன்கூட இருக்கான். நீங்க?"

"நூத்தி இருபத்தி ஒன்னு, தம்பி!"

—எனக்கு உள்ளுக்குள் ஒரே மகிழ்ச்சி! எப்படியோ இல்லாத நண்பனைப்பற்றிச் சொல்லி விலாசத்தை வாங்கி விட்டேனே!

"உம்....உங்க பெயர்?"

"சொக்கலிங்கம் பிள்ளை!"

— ஒரு தடவை அந்தப் பெயரை மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். வரப்போகிற என் மாமனார் பெயரல்லவா அது?

—இதுவரை அந்தப் பெண் என்னை ஒரு முறையாவது திரும்பிப் பார்க்க வேண்டுமே!

"ஏய், அதற்கு ஏன் வருந்துகிறாய்? நல்ல பெண்ணுக்கு அதுதானே அடையாளம்?"—இப்படி என் மனம் சொல்லிக் காட்டியது!

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது.

"இப்படிப் படுத்துக்கம்மா!" —அந்தக் கிழவர் நகர்ந்து உட்கார்ந்து அழகிக்கு இடம் கொடுத்தார். "ஊஹூம், வேண்டாம்! நீங்க படுங்க !"

"அட, சொன்னா கேக்க மாட்டே....படும்மா!"

—அவ்வளவு பெரிய கூட்டத்தில் விவாதம் செய்வது அழகல்ல என்று கருதி அந்த உடலைக் கீழே சாய்த்தாள்!

—அவள் தூங்கினாள்; என் கண்கள் தூங்கவில்லை!

✻

எழும்பூரிலே இறங்கியதும் தந்தையையும் மகளையும் பஸ்ஸிலே ஏற்றிவிட்டு அவசர அவசரமாக 'டேக்சி'யில் ஏறிக் கொண்டு ஹாஸ்டலுக்கு ஓடினேன்.

"மோகன்...மோகன்......!" பலமாக அறைக் கதவைத் தட்டினேன்.

"ஏய், தூங்குமூஞ்சி! கதவைத் திறக்கப்போகிறாயா இல்லையா?" —மீண்டும் தட்டினேன.

—தூங்கி வழிந்தவாறே மோகன் கதவைத் திறந்தான்.

"என்னப்பா இது, பத்து மணிக்கெல்லாம் தொந்தரவு செய்துகொண்டு! காலை வண்டியில் ஏறி சாயந்தரம் வந்திருக்கக்கூடாது?"—என்று முணகியவாறே கலைந்துபோன தூக்கத்தை மீண்டும் தொடர்வதற்காக அவன் கட்டிலில் சாய்ந்தான்.

"ஏய், மோகன்! ஒரு முக்கியமான விஷயமடா! நான் சொல்வதைக் கேளு!"

"என்னப்பா இது தொந்தரவு! உலகத்திலேயே இன்பம் எது தெரியுமா? நித்திரா தேவி நம்மைவிட்டு விடைபெற்று போகிற நேரத்தில் கண்களை மூடிக்கொண்டு படுக்கையில் உழல்கிறோமே, அதுதான்!"

"அது கிடக்கட்டுமடா! இப்போது நான் கல்யாணம் செய்துகொள்வதென முடிவு செய்து விட்டேன்!"

"ஆ! உனக்குக் கல்யாணமா?" —மோகன் திடீரென்று எழுந்து உட்கார்ந்துகொண்டான்.

"பெண் யாரப்பா? பெயர் என்ன?"

"அதுதான் இன்னும் தெரியவில்லை!"

"பெயரில்லாத பெண்ணா?"

"தற்காலிகமாக அழகி என்று பெயர் வைத்திருக்கிறேன்."

"யப்பாடி! காதலா?"

"அப்படித்தான் சொல்ல வேண்டும்; கண்டதும் காதல்!"

[தொடர்ச்சி பக்கம்—12]

"கண்ணும் கண்ணும் கலந்தது!"

அறிஞர் அண்ணாவின் மற்றுமொரு பொன்னோவியம் திரைப்படமாகிறது என்ற நற் செய்தியை, சென்ற 11—10—59 அன்று சென்னை பாரமவுண்ட் ஸ்டுடியோவில் நடைபெற்ற துவக்க விழா நாட்டிற்கு வழங்கியது. மறைந்த நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பெயரில் 'கலைவாணர் பிக்சர்ஸ்' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியிருக்கிற தோழர் எத்திராஜ் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

துவக்க விழாவிற்கு ஓய்வு பெற்ற நீதிபதி திரு. அய்யாசாமி (செட்டியார்) தலைமை வகித்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்று கே ராசாராம் பேசினார். கலைவாணர் பிக்சர்சாரின் கன்னி முயற்சி கலையுலகில் நல்லதொரு வெற்றியை அடையும் என்று உறுதி தந்தார்.

திரு. அய்யாசாமி அவர்கள் தலைமையுரை யாற்றும்போது, "அறிஞர் அண்ணாவின் கதை வசனம் என்கிறபோது, 'கண்ணும் கண்ணும் கலந்தது' என்ற பெயருடைய இத்திரைப்படம் நாட்டிலே கருத்துப் புரட்சியை ஏற்படுத்தும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன்!" என்று குறிப்பிட்டார்.

"மேலும், இன்று திரையுலகில் ஈடுபட்டிருப்பவர்கள் தமிழகத்திலேயே நல்ல கதைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இழந்திருப்பது கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். அதனால்தான், அவர்கள் கதைகளைத் தேடி வங்காளத்திற்கும், மற்ற இடங்களுக்கும் செல்லுகிறார்கள். அந்தக்குறைபாடு முதலில் ஒழிய வேண்டும்! இந்தப் படத்தைப் பொறுத்தவரை அதிலே தூய தமிழ் மணம் கலந்திருக்கும் என்பது உறுதி; அதோடு இதில் முழுவதும் தமிழ் நடிகர்களே நடிப்பது குறித்தும் நான் மிகவும் மகிழ்கிறேன்!" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து, காமிராவை முடுக்குவதன் மூலம் படத்தைத் துவக்கி வைத்த தமிழறிஞர். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் நல்லதொரு கருத்து விருந்தளித்தார்.

"கண்ணும் கண்ணும் கலந்தது—என்ற தலைப்பு மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கிறது. கண்ணோடு கண் கலந்தால் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில என்று வள்ளுவர் குறிப்பிட்டார், ஆகவே கண்ணோடு கண் கலந்து பேசாமற் பேசட்டும் என்றுதான் இந்தத் தலைப்பை அறிஞர் அண்ணா தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில்

"முகத்திலேயுள்ள உறுப்புகளிலேயே கண் மிகவும் சக்தி வாய்ந்தது; நன்றியுள்ளது! உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பேராற்றல் பெற்றது! எத்தகைய செய்திகளைக் கேட்டாலும் காது எல்லாவற்றையும் வாங்கிவைத்துக் கொள்ளத்தான் செய்யும். ஆனால் கண் அப்படியல்ல; தான் கேட்கின்றவைகளுக்கு, அல்லது காணுகின்றவைகளுக்கு ஏற்ற வண்ணம் உணர்ச்சிகளை வெளிப்படுத்திவிடுகிறது. இன்பத்திற்கு இன்பம்; துன்பத்திற்கு துன்பம்; நன்றிக்கு நன்றி—உடனுக்குடன் தெரிவித்து வருகிறது. அதனால்தான் போலும் தமிழில் இடுக்கண், வன்கண் போன்ற ஆழமான சொற்கள் 'கண்'ணை வைத்தே உருவாக்கப் பட்டிருக்கின்றன. அறிவியலும் கலையும் நாட்டிற்கு இரண்டு கண்கள். அதனால் தான் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்ற தமிழ் முதுமொழி வழக்கிலுள்ளது சந்திரனை அடைய இன்று அற்புத முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. அணுக்குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன; இத்தகைய அறிவியல் வளர்ச்சிகள் எல்லாமே எண்களை அடிப்படையாகக்கொண்டன. அதுபோல் எல்லா கலைகளுமே எழுத்து வழிப்பட்டவை.

கண்ணும் கண்ணும் கலந்தது என்ற அறிஞர் அண்ணாவின் இந்தத் திரைக் காவியத்தில், கலையும் கருத்தும் கலக்கும்!" என்று கூறி முடித்தார்.

இறுதியில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் நன்றியுரை கூற விழா இனிது முடிவுற்றது.

இந்தத் திரையோவியத்தில், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, இலட்சிய நடிகர் ராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, குலதெய்வம் ராசகோபால், எம். என். ராஜம், விஜயகுமாரி: மனோரமா—முதலியோர் நடிக்க இருக்கின்றனர். உடுமலை நாராயணக்கவியும், கவிஞர் கண்ணதாசனும் பாடல்களை எழுத, விசுவநாதன்—ராமமூர்த்தி இசையமைக்கின்றனர். இந்தப் படத்தை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

நவம்பரில் "பொன் விளையும் பூமி"!

சகோதரர் அரங்கண்ணல் கதை வசனம் எழுதியிருக்கும் ஓரியண்டல் மூவிசாரின் 'பொன் விளையும் பூமி' முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. நிச்சயம் அது நவம்பர் மாதத்தில் திரையிடப்பட்டுவிடுமாம், கிராமச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட அந்தக் கதையை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்திருக்கிறார். ஜெமினி கணேசன், பத்மினி, ராகினி, கே. ஏ. தங்கவேலு, சந்திரபாபு, டி. எஸ். பாலையா — ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

'கண்ணும் கண்ணும் கலந்தது' துவக்க விழாவின்போது மேடையில் அறிஞர் அண்ணா, அய்யாசாமி (செட்டியார்) இருவரும் வீற்றிருக்க, டாக்டர் மு. வரதராசன், துவக்கி வைக்கிறார். அவருக்குப் பக்கத்திலே தயாரிப்புத் துறையைச் சேர்ந்த தோழர்கள் எத்திராசும், கே. ராசாராமும நிற்கின்றனர்.
(புகைப் படம் : சாமுவேல்)

மனிதனின் கதை...

[4—பக்கத் தொடர்ச்சி]

எண்ணினார். மாதவி, மனிதனின் கதை மன்னர்களால் மட்டும் உருவாக்கப்படவில்லை. அரசியல் துறையைப் போல வேறுபல துறைகளும், அத்துறைகளில் சிறந்து விளங்கிய மேதைகளும், மனித வாழ்க்கையை வழி நடத்தும் வகையில் பெரும் பங்கு கொண்டிருக்கிறார்கள். மன்னர்கள் மண்ணின பரப்பிலே மாற்றத்தை உண்டாக்கினார்கள். எண்ண உலகிலே மாற்றத்தை உண்டாக்கி மனித வாழ்க்கையைத் திசை திருப்பியவர்கள் அவர்களைவிட எவ்வளவு பெரியவர்கள் — சிறந்தவர்கள் — என்பதை நீ சிந்திக்க வேண்டும். தான் வாழ்ந்த எண்பத்து நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ எழுபது நூல்கள் வால்டேர் எழுதி முடித்திருந்தார். வேறு துறைகளைவிட நாடகத் துறையில் அவர் பெற்ற வெற்றியே மிகவும் சிறப்பானது என்று நம்பப்படுகிறது!

வால்டேர் நாடு கடத்தப்பட்டாலும் அவருடைய செல்வாக்கு பிரஞ்சு நாட்டில் வளர்ந்த வண்ணமாகவே இருந்தது. பிரஞ்சு மக்கள் தாயகத்துக்கு அவர் திரும்பி வருவதை ஆவலுடன் எதிர்பார்த்தனர். தன்னுடைய எண்பத்து மூன்றும் வயதில், அவருடைய ஒப்பற்ற நாடகமான ஐரீன் பாரிசில் நடிக்கப் படுவதைக் கண்டு களிப்பதற்காக வால்டேர் அந்நகருக்கு வந்தார். பிரஞ்சு மக்கள் மிகுந்த ஆரவாரத்துக்கிடையே, பாரிஸ் தெருக்களின் வழியாக அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பேனா மன்னரான வால்டேர், மக்களின் முடிசூடா மன்னராக அமர்ந்து தன் நாடகத்தை ரசித்தார். மறு ஆண்டு, தனது எண்பத்து நான்காம் வயதில்—1778-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தாள் — வால்டேர் புகழுடம்பு எய்தினார்.

மனித உரிமையை உயிரினும் மேலாகப் போற்றியவர் வால்டேர். "நீ சொல்லுவதில் ஒரு வார்த்தையைக்கூட நான் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அதைச் சொல்லுவதற்கு உனக்குள்ள உரிமையைப் பாதுகாப்பதற்காக உயிருள்ள வரையில் போராட நான் தயார்!" என்பதுதான் அவருடைய உரிமைத் தத்துவம். தேவாலயத்தில் புதைக்கப்பட்ட அவருடைய சவம், பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு தோண்டி எடுக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, மற்றொரு மேதையான ரூசோவின் கல்லறைக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது. வால்டேரின் கல்லறையில் கீழ்க்கண்ட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. "கவிஞன், தத்துவ ஞானி, வரலாற்று ஆசிரியன்; மனித அறிவை சிறகடித்துப் பறக்க வைத்தவன்; நம்மையெல்லாம் உரிமை வாழ்வுக்குத் தயார்படுத்தியவன்."

எவ்வளவு உண்மையான வாசகம்! வால்டேரைப் போலவே பிரஞ்சு மக்களை புரட்சிக்குத் தன் எழுத்தால் தயார் படுத்திய மற்றொரு மேதை ரூசோ! அவரையும் மற்றவரையும், அவர்களால் தோன்றிய பிரஞ்சுப் புரட்சி பற்றியும் அடுத்து வரும் கடிதங்களில் சொல்லுவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

கலப்படம்

வேலை வேண்டுவோரே; தேவை விளம்பரம் இதோ!

தேவையாம்!

வேலை எமக்கில்லையாயெனத் தேம்பியழுவோரே! உங்கள் காதுகளைக் கொஞ்சம் இப்புறம் திருப்புங்கள்!

'வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிட்டதே!' — என்று கதறிய எதிர்க்கட்சிகளின் வாயடைக்க வந்துவிட்டது 'ஒரு' தேவை விளம்பரம்!

என்ன தேவையாம்?

நிருபர் தேவை!

எதற்கென்று கேட்கிறீர்கள்? இலக்கியக் கூட்டங்கள் நடக்கின்றனவே அங்கு சென்று குறிப்பெடுத்துவர!

அதற்கென்ன படிப்பு வேண்டுமாம்?

இலக்கியத்தில் நல்ல பயிற்சி வேண்டுமாம்! இலக்கணம் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். பொழுதுபோக்குக்கு மேடையேறும் பேராசிரியர்களின் இலக்கியச் செறிவுள்ள பேச்சை சிந்தாமல் சிதறாமல் குறிப்பெடுக்க வேண்டுமாம்!

விளம்பரம் தந்தது யார் தெரியுமா?

'தமிழ் எழுத்தாளர் சங்கம்'— என்ற உருவில் தமிழ்த் துரோகிகளை — வடமொழித் தாசர்களைப் பெரும்பாலும் வளர்த்து வைத்திருக்கும் சங்கம்!

என்ன இப்படித் திடீரென்று சங்கத்திற்கு நல்லெண்ணம் வந்துவிட்டது என்று கேட்கிறீர்களா? இந்த நல்லெண்ணம் தானாகக் கனிந்துவிடவில்லை. தமிழ் உலகமே தடியெடுத்து, புகை ஊதிப் பழுக்க வைத்ததால் தான் இந்தப் பழம் கனிந்தது.

சுற்றி வளைப்பானேன்? ரா. ஸ்ரீ. தேசிகன்—எனும் 'வடமொழி எழுத்தாளர்' ஒருதடவை தமிழைத் தரம் தாழ்த்திப் பேசிய போது எல்லா பத்திரிகைகளும் அவரைத் 'தவறாகப்' புரிந்து கொண்டு தாக்கினவாம்! அதனால் 'உண்மைச் செய்தியை'— அதாவது அவர்களுக்குத் தேவையான செய்தியை வெளியிட உதவி செய்யக்கூடிய 'இலக்கிய நிருபர்' தேவையாம்!

அப்படி இலக்கிய நிருபர்கள் இல்லாதிருந்ததால் இலக்கிய மேதாவிகள் தாக்கப்பட்டது மல்லாமல் என்னென்ன நிகழ்ந்தன என்பதை விளம்பரம் தந்த தமிழ் எழுத்தாளர் சங்க ஏடு—குறித்திருக்கிறது.

* சமீபத்தில் ஒரு பேராசிரியர் பேசின பேச்சு இன்னொரு பேராசிரியர் பேசியதாக வெளி வந்தது!

* புத்தக வெளியீட்டு விழாவில், எந்தப் புத்தகம் வெளியிடப்பட்டதோ அந்தப் புத்தகத்தின் பெயரே மாறி இருந்தது!

* பாராட்டுவிழா நடந்த இடம் வேறாக இருக்க, செய்தியில் வந்த இடம் இன்னொன்றாக இருந்ததாம்!

இப்படிப் பலப்பல காரணங்களைக் காட்டுகிறார்கள், பாவம்! இலக்கிய உலகிற்கு மாத்திரம் நிருபர்கள் இப்படிச் செய்வதில்லை. அரசியல் உலகிற்கும், கலை உலகிற்கும் இவ்விதத் தவறுகளைப் புரிகிறார்கள்—என்பதை 'ரா—ஸ்ரீ—கம்பனி எழுத்தாளர் சங்கம்' — தெரிந்து கொள்ளவில்லை !

அந்த நிருபர்கள் வேலைக்கு மனுப் போடுபவர்கள், எந்த முகவரிக்குப் போட வேண்டும்— என்ற முணுமுணுப்புக் கேட்கிறது. இந்த 'ரா.ஸ்ரீ. கம்பனியே'— எல்லா நிருபர்களுக்கும் சம்பளம் கொடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்புகிறதா?—எனப் பேசிக் கொள்ளும் சலசலப்புக் கேட்கிறது!

அப்படியெல்லாம் ஒன்று மில்லை. நிருபர் தேவை—ரா. ஸ்ரீ. போன்றோர் பேச்சுக்களை 'சரியாக' வெளியிடும் இலக்கிய நிருபர் தேவை —என்று கூறும் அதே வாயால், அடுத்த நொடியில் 'இந்த மாதிரி இலக்கிய நிருபர்களை வைத்துக்கொள்ள பத்திரிகைகளும் தேவை.'— என்றுதான் கூறுகிறார்கள்!

தங்கள் பேச்சைச் சரியாக வெளியிடும் இலக்கிய நிருபர்கள் தேவை!—அதோடு அந்த இலக்கிய நிருபர்களை வேலைக்கு அமர்த்தும் பத்திரிகைகளும் அவசியம் தேவை!!

—இதுதான் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தேவை விளம்பரம்!

* * *

தேவை! தேவை!

தேவாதி தேவன் தீயேந்திக் கூத்தாடும் திருத்தில்லையில் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரம் செய்ய நல்ல இளைஞர்கள் தேவை!— இன்னும் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் — 'மேடை வாயாடிகள்' தேவை!

புள்ளிவிபரம் காட்டத் தேவையில்லை; கள் குடிப்பதை நிறுத்திய கதை கூற வேண்டியதில்லை; கதர் சுமந்த வரலாறு வேண்டாம்!

திட்ட வேண்டும் — வசை மொழிகளால் எதிர்க்கட்சிகளைத் தேளெனக் கொட்ட வேண்டும்! சாதனைகளைக் கூற வேண்டாம்!— நல்லவர் மன வேதனையடையும்படி பேச்சால் எதிர்க்கட்சிகளைக் கூறுகூறாக்க வேண்டும். நேருமாதிரி 'காட்டுமிராண்டி' 'முட்டாள்கள்' - என்று திட்டலாம்!

காமராசர் பாணியில் 'பிச்சைக்காரர், அன்னக் காவடிகள்!'— என்றும் வையலாம்!

பக்தவத்சலம் வழியில் 'கூத்தாடிகள்; குடுகுடுப்பைக்காரர்கள்!'—என்று தூற்றலாம்!

—முக்கியமாக இந்த வசவுகள் தி.மு. க-விற்கே சேர வேண்டும்! இளைஞர்கள் உணர்ச்சி வேகத்தில் தங்களை மறந்து, இப்படித் திட்டுபவர்கள்தான் அந்தக் குணமுள்ளவர்கள்— என்று கூறிவிடக் கூடாது!— இது மிக மிக மிக முக்கியமான நிபந்தனை!

கதர் இதுவரை போடமலிருக்கலாம்! பரவாயில்லை; வாய் நீளம் காட்டினால் போதும்!

சாப்பாட்டுக்குக் கவலைப்படக் கூடாது! ஏனெனில் மிட்டா மிராசுகள் எல்லாம் நம் பக்கம்!

அடி விழுமே என்று பயப்பட வேண்டாம்! — கழகத்துக்காரர்கள் அதைச் செய்யமாட்டார்கள்!

மான மரியாதை யெல்லாம் பார்க்கக் கூடாது — ஏனெனில் பத்துப்பேர்தான் கூட்டத்திற்கு வருவார்கள்!

காங்கிரஸ் பேச்சாளர்கள் கழகக் கூட்டத்திற்குப் போகக் கூடாது! — ஏனெனில் அடுத்த நாள் நீங்கள் காங்கிரசில் இருக்க மாட்டீர்கள்!

தாழ்த்தப்பட்டோர் ஆதரிப்பது பற்றிக் கவலைப்படக்கூடாது! ஏனெனில் அவர்களுக்கு நந்தனார் கதையும்—'பாரத தேச'த்தில் நந்தனார் பரம்பரை படும் கஷ்டமும் தெரியும்!

பயனை எதிர்பார்க்காது வேலை செய்!—என்ற கீதாபதேசத்தை சிதம்பரம் தேர்தலில் நாம் பின்பற்ற வேண்டும். ஏனெனில், சிதம்பரம் தேர்தலில் பயனும் கிடைக்காது. சட்டசபை நாற்காலியும் கிடைக்காது!

— இந்த நிபந்தனைகளுக்கு உட்பட பேச்சாளர்கள் எமக்குத் தேவையென அறிவிக்கிறார், இந்திய தேசியக் காங்கிரசின் சிதம்பரம் தொகுதி உபதேர்தல் பிரச்சார சபையின் வடக்கு மண்டல காங்கிரசின் உப அக்கிராசனர்!

* * *

தேவை! உடனே தேவை!— —இப்படி அறிவிப்பவர் இதுவரை சொல்லி வந்தவர்களைப் போலல்ல; அறிவும் அதிகாரமும் பதவியும் கொண்டவர்!

இந்தியாவின் முதல் குடிமகன்—பாரதக் குடியரசின் ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரசாத்!

அவர் தெரிவிக்கிறார், ஏதோ தேவையென்று! — பொதுவாக ஜனாதிபதியாதலால் நாட்டுத் தேவையைத்தான் தெரிவிப்பார்!

பிற்போக்கான நிலையிலுள்ள இந்தியாவிற்குத் தேவையானது எது?—என்ற வினாவை எழுப்பினார்; அதற்கு அவரே விடையும் தந்தார்!

சராசரி 27 வயதே வாழ்வோரை கொண்ட நாட்டிற்கு டாக்டர்கள் தேவை என்றாரா? இல்லை!

குடிசைகளில் — ஓலைவேய்ந்த குகைகளில் வாழும் மனிதர்களைக் கொண்ட இந்நாட்டிற்கு என்ஜினீயர்கள் தேவை என்றாரா? இல்லை!

தொழிலற்று, பிறரைத் தொழுது கிடக்கும் நாட்டினர் முன்னேறிட தொழில் நிபுணர்கள் தேவையென்றாரா? இல்லை! இல்லை!!

[தொடர்ச்சி பக்கம்—12]

புரியும்படி மாற்றுக!

*

தமிழக வரலாறு புதுப்பிக்கப்பட வேண்டும் — வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குப் புது உரை ஆக்க வேண்டும்!

— என்றெல்லாம் பேச ஆரம்பித்து விட்டார் காமராசர்! பேசட்டும்! நன்றாகப் பேசட்டும்! வேண்டாமென்பாரில்லை. ஆனால், ஏனய்யா உங்களுக்கு ஒவ்வாத செயல்—என்று கூறுவோர் தான் உண்டு!

தமிழக வரலாற்றைபுதுப்பிக்க வேண்டும் — எனப் பேசும் தமிழமைச்சரே, உம் ஆட்சிச் சக்கரம் சுழலும் இந்த நாட்டின் பெயரை முதலில் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

சென்னை — என்பதை மாற்றி தமிழகம் — என்று பெயரிடுங்கள்!

அடுத்து உங்கள் வழக்கிலிருந்துவரும் 'ஜீ'க்களை அகற்றி விடுங்கள்.

'சே! சே! அதை மாற்றுவார்களா யாராவது? காந்திக்கே சேர்க்கப்பட்ட அடைமொழி 'ஜீ'!—காந்திஜிக்கு என்று மாத்திரமல்ல; எங்களை ஆள்வோரின் பெயரனைத்திற்கும் அந்தப் 'பட்டத்தை'ப் போட்டிருக்கிறோம்!

பண்டித நேருஜீ
பண்டித பந்த்ஜீ
ராசேந்திர பிரசாத்ஜீ
மொரார்ஜீ
படீல்ஜீ
லால்பகதூர்ஜீ
ஜகஜீவன்ராம்ஜீ
தாண்டன்ஜீ
இந்திரா காந்திஜீ

—இப்படி 'ஜீ' போடுவது புதிதல்ல; அடிமைப் பட்டம் மாதிரி இது! அதாவது வெள்ளைக்காரர்களுக்கு அந்தக் காலத்தில் 'துரை' — என்ற பட்டம் கொடுத்த மாதிரி!—என்று விளக்கம் வேறு தர ஆரம்பித்து விடுகிறார்கள், காமராசரின் ஆதரவாளர்கள்!

அவர்களுக்குத்தான் — வட மொழியாளர்களுக்குத் தான் அப்படிப் பட்டம் தருகிறீர்கள் — என்றால் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து மந்திரியாய் இருக்கும் கக்கனுக்கு ஏன் 'ஜீ' பட்டம்?

மதிப்பு அவருக்குத் தர வேண்டுமென்றால்—பாமரர் புரிகிற மாதிரி 'ஆர்' விகுதி சேர்த்துக் 'கக்கனார்!' — என்றழையுங்களேன் !

பாமரர் புரியும் வண்ணம் திருக்குறளுக்கு உரை கேட்கும் முதலமைச்சர் அவர்களே!

உங்கள் நண்பர் கக்கன் ஜீயின் பெயரைப் பாமரர் புரிந்து கொள்ளும்படி மாற்றுங்கள்!

சுழல் விளக்கு

மாலுமி

சோமநாதன்; சிறுகூடல்பட்டி.

(?) ஒரே இரவில் நேரு வந்து போய் விட்டாராமே தமிழகத்திற்கு?

அடிமைப் பெண்ணின் வீட்டுக்குக் கோலாகலமாக கொட்டு முழக்குடன் பட்டப் பகலிலா வருவார்கள்? எப்போதோ வருவார்; எப்போதோ போவார்! அதைக் கேட்க நீங்கள் யார்?

சிவசங்கரன்; காரைக்குடி.

(?) கேரள அமைச்சர் நம்பூதிரிப்பாட்டின் இந்திய சுற்றுப் பயணத்தில் என்ன கிடைத்தது?

காங்கிரஸ்காரர்களுக்கும், பிற்போக்குவாதிகளுக்கும் கறுப்புக்கொடி காட்டும் வேலையும், நம்பூதிரிபாட்டுக்கு 'அகில இந்தியப் புகழும், வாய் வலியும் தான் கிடைத்தன!

ராசமாணிக்கம்; விருதுநகர்.

(?) சர்க்கரை பற்றாக்குறை தேசத்தின் சுபீட்சத்தையா காட்டுகிறது?

அப்படிக் காட்டுவதாக மதி மந்திரி ஒருவர் பேசியிருக்கிறார். பற்றாக்குறை சுபீட்சத்தைக் காட்டினால், இனி பஞ்சம் நாட்டு வளத்தைத்தான் காட்டும்! பட்டினிப் பிரேதங்கள் வீதியில் விழுந்தால் அது நாட்டின் செழிப்பைக் காட்டும்! நாடு பூராவும் செத்து அழுகிய பிணக்காடாக மாறினால் அது நாட்டில் குதூகலம் கொழித்து விளையாடுவதைக் காட்டும்!

மொய்தீன்; கோவை.

(?) சிதம்பரத்தில் தேர்தல் தகராறுகளாமே?

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு — ஆகிய மூலமந்திரங்களின் முழு உருவங்களாக நம்மவர் நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடந்தாலும் நம்மை எதிர்ப்பவர் காங்கிரசல்லவா? ஒரு புதரில் தீப்பிடித்தால் போதாதா, பூங்காவே எரியுண்ண?

இர. ராமசாமி; பொள்ளாச்சி.

(?) இங்கிலாந்தில் ஏன் கம்யூனிஸ்ட்டுகள் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை?

ஜனநாயகத்தின் தொட்டிலும், பிற்போக்குவாதிகளின் கொட்டிலுமான இங்கிலாந்திற்கேற்றபடி தங்கள் கம்யூனிசக் கொள்கைகளை மாற்றிக்கொள்ள முடியவில்லை போலிருக்கிறது! காலத்திற்கேற்றபடி கம்பர் விழாக் கொண்டாடும் நம் கம்யூனிஸ்ட்டுகளிடம் அவர்கள் பயிற்சி எடுக்கலாம்—என சிபாரிசு செய்கிறோம்.

அருள்தாசன்; திருவையாறு.

(?) கோயில்கள் நிர்வாகத்தைக்கூட இனி டில்லி அரசு தன் காணிக்குமாமே?

உள்ளதை ஒளியாது கூறிவரும் ஒரு சில பண்டார சந்நிதிகள் 'வடக்கு வாழ்வதோ? தெற்குத் தெய்வதோ ?' — என்று நம்முடன் குரல் கொடுக்க கண்டிப்பாக ஓடோடி வருவது உறுதி.

சுந்தரராசன்; பசுமலை.

(?) சுதந்திரக் கட்சிமீது ஏன் காங்கிரஸ் தன் கவனத்தை செலுத்துகிறது?

பிற்போக்கு எண்ணங்களைத் தன்னைவிட அதிகமாகப் பயன்படுத்திக் கொள்கிறதே அந்தக் கட்சி—என்ற ஆத்திரமும், பிரிவினை உணர்ச்சிவலுப்பதை விட இந்தக் கட்சி வளரட்டுமே!—என்ற அனுதாபமும் தான் காங்கிரசின் முழுக் கவனத்தை சுதந்திரக் கட்சிமீது திருப்பியுள்ளது!

சி. நாமதேவன்; உசிலை.

(?) லண்டனில் கேரள அரசாங்கத்தைக் கவிழ்த்த மன்னத்து பத்மநாபனுக்கு வரவேற்பாமே?

கவிழ்க்கும் கலையிற் சிறந்த விபீஷணர்களுக்கு ஆதிக்கபுரியில் என்றும் வரவேற்புத்தான். அதிலும் ஒரு கம்யூனிச சர்க்காரைக் கவிழ்த்து 'பத்மவிபீஷண' பட்டம் பெற்றவருக்கு லண்டனில் வரவேற்பு இல்லாமலா போகும்?

அருள்சாமி; சுந்தரபாண்டியம்.

(?) நம் அமைச்சர்கள் விரும்பும் அளவிற்கு வடமொழி அவ்வளவு கனிந்த மொழியா?

கனிந்த மொழியில்லை அது! காக்கை விரும்பும் கனி!

கலப்படம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

பின் என்னதான் தேவையென்றார்?

மனிதர்கள் தேவையாம்!

—'டாக்டர்களோ என்ஜினியர்களோ, தொழில் நிபுணர்களோ தேவையில்லை; 'மனிதர்'தேவை- இந்நாட்டிற்கு!'—இது நாட்டின் முதல்வரின் பேச்சு!

மனிதர் தேவையாம்! மனிதத் தன்மையுள்ளவர் தேவையாம்!— கூறுகிறார் நாட்டை ஆள்பவர்!

தேவை, மனிதர் — என்றால்— இன்று இருப்பவர் மிருகங்களா? தேவை, மனிதத் தன்மையென்றால் இங்கிருப்பது மிருகத்தன்மையா?

ஐயகோ! ஆட்சித் திமிர் சாதுவென இருந்தவர்களைக் கூட சண்டாள மொழி பேச வைத்து விடுகிறதே!

நாக் கூசாமல் நாற்பது கோடி மக்களையும் மிருகங்கள் —மிருகத் தன்மையுள்ளவர்கள் —என்று கூறாமற் கூறி, கொல்லாமற் கொன்று விட்டாரே!

அறம் தவறிப் பேசும் இவர்களை,

'இனிப் பொறுப்பதில்லை — தம்பி எரிதழல் கொண்டுவா! நம்மை இகழ்ந்து விட்டார் — அவர் நாவை எரித்திடுவோம்!' —என்று அறம் பாடும் பாரதிகள் இல்லையே! உள்ளபடியே அந்தப் 'பாரதிகள்'தாம் இன்றைய தேவை! ∴

கோரிக்கை தா...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

புரத்தையடுத்த தண்டலம் கிராமத்தில் அறிஞர் அண்ணா தந்தாரே, அந்தக் கோரிக்கைகளின் கதி என்ன?

குடகனாறு திட்டம் வேண்டுமென்ற கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதே அதன் கதி என்ன?

பரம்பிக்குள நீர்த் தேக்கத்தின் பலன் பல்லடம் வட்டத்திற்குக் கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதே அது என்னவாயிற்று?

'இந்த எண்ணம் தவறு, கோரிக்கைகள் சமர்ப்பிப்பது ஜனநாயகக்கடமை. நீங்கள் கேட்டதை மந்திரிமார் செய்யவில்லையென்றால், இருக்கவே இருக்கிறது, தேர்தல்! அதில் உங்கள் எண்ணத்தை எடுத்துச்சொல்லுங்கள். மந்திரிமார்களுக்குப் பாடம் கற்பியுங்கள்' —என்று யாராவது சொன்னால் —தப்பித்தவறி, இதே தொனியில் அமைச்சரே கூறினால் அண்மையில் சிதம்பரம் தொகுதியில் சென்னை மாநில முதலமைச்சர் கோரிக்கைகள் சமர்ப்பிப்பது பற்றிப் பேசிய பேச்சை பக்தவத்சலனாரின் பார்வைக்குக் கொண்டு வருகிறோம்.

'கோரிக்கைகள் தந்து பயமுறுத்த வேண்டாம். கோரிக்கைகளை நிறைவேற்றினால்தான் ஓட்டுப் போடுவேன் என்றும் கூற வேண்டாம்! இதற்கு நாங்கள் பயப்படமாட்டோம்'

—எனும் பொருள்பட, தமக்கே உரிய 'பயமுறுத்தும் பாணி'யில் பேசியிருக்கிறார் முதலமைச்சர்!

* 'கோரிக்கைகள் தாருங்கள்!'—என்று விரிந்த மனதோடு பேசுகிறார் ஒரு அமைச்சர்.

* 'கோரிக்கை தந்து பயமுறுத்த வேண்டாம்!' — என்று வளைந்த மனதோடு பேசுகிறார் இன்னொரு அமைச்சர்.

—இப்படி அமைச்சர்களின் இருவிதப் பேச்சுக்கிடையே சிக்கித்தவிக்கிறார்கள் மக்கள்!

முன்பு கோரிக்கை தந்தார்கள்; கவனிப்பாரில்லை! 'மலர் மாலை ஏன்? கோரிக்கை கொண்டுவா!' —என்று ஓங்கிக் குட்டுகிறார் ஒரு அமைச்சர்!

'கோரிக்கையாகொண்டு வந்தாய்!' — என்று கையை 'சடசட'வென முறித்து எறிகிறார் இன்னொரு அமைச்சர்!

அந்தோ வேதனை! வேதனை!! ∴

மதியத்தில்...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

"அய்யையோ, வேண்டாமப்பா அது! இவ்வளவு வருஷம் எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இருந்தெல்லாம் தப்பித்து விட்டாயே! கல்லூரியை விட்டுப்போகிற நேரத்திலா இந்த ஆபத்தில் மாட்டிக் கொள்ளவேண்டும்?"

"அப்பா, சாக்ரட்டீஸ் கொடுக்கு! நான் சொல்வதைக் கேள், புரசைவாக்கம், வாஞ்சிலிங்கம் தெரு, நூத்தி இருபத்தி ஒன்னும் நம்பர் வீடு! நீ போய் பார்த்து, அவள் அப்பாவுடன் பேசிவிட்டு வாடா!"

"ஒகோ; அவ்வளவு தூரம் துணிந்தாயிற்றா? இங்கே பார்— காதலைப்பற்றி என் முடிவு என்ன தெரியுமா?"

"என்ன?"

"இந்த உலகத்தில் காதலைப் பற்றி இரண்டே அபிப்பிராயம் தான் உண்டு! ஒன்று: வாலிப வேகத்தில் காதல் செய்து 'அய்யோ, காதல் செய்துவிட்டோமே' —என்று'—பின்னால் வருத்தப்படுபவர்கள் ஒருவகை! அடுத்து: வாலிப வயதில் உன்னைப்போலவும், என்னைப்போலவும் துணிச்சலும், ஆர்வமும் இல்லாமல் இருந்துவிட்டு, 'அய்யோ! வாலிப வயதில் காதல் செய்யாமல் இருந்துவிட்டோமே' என்று பின்னால் வருத்தப்படுபவர்கள், அடுத்த வகை! வகை எப்படியிருந்தாலும் விளைவு, வருத்தம் தானப்பா!"

"டேய், டென்னிசன் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? காதலிக்காமலே சாவதைவிட ஒரு முறையாவது காதல் செய்து அதில் தோற்றுப்போவது எவ்வளவோ நல்லதாம்! உன் காலில் விழுந்து வேண்டுமானாலும் கேட்டுக்கொள்கிறேன்; போய் விசாரித்துக்கொண்டு வாடா!"

"டேய், டேய்.... என்ன இது! குளித்துவிட்டுப் போய் வருகிறேனப்பா!"

—மோகன் இந்த வார்த்தையைச் சொன்னபிறகுதான் எனக்கு உயிரே வந்தது! பார்ப்பதற்குப் பெரிய மனிதன் போலிருக்கும் அவன் வெற்றியோடு திரும்புவான் என்பதிலே எனக்கு அளவுகடந்த நம்பிக்கை உண்டு!

மணி இரண்டு இருக்கும். வெய்யில் அனலாகக் கொளுத்திக் கொண்டிருந்தது.

போய் விசாரித்ததும் அவன் 'போன்' செய்வதாகச் சொல்லியிருந்ததால், நான் போனுக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தேன்.

"டிரிங்..."

—அடுத்தமுறை மணி அடிப்பதற்குள் நான் 'ரிசீவரை' எடுத்துக்கொண்டேன்,

"யார், மோகனா? அந்த அழகி பெயர் என்ன?"

"காத்தாயி!"

"ஏய், விளையாடுகிறாயா?"

"நீ ஒரு முட்டாளப்பா! முதலில் போய் உன் கண்ணுக்குக் கண்ணாடி போட்டுக்கொள்"

"ஏண்டா! நீ வேறு யாரையாவது அவலட்சணத்தைப் பார்த்துவிட்டாயா?"

"நான் பார்த்தது அந்த அழகியைத்தான்! அவள் கழுத்திலே தாலி இருந்ததை நீ பார்க்கவில்லையா?"

"என்ன தாலியா? அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?"

"ஆமாம்! உன்னுடைய துர் அதிர்ஷடம் அவளுக்கு ஒரு தங்கைகூட இல்லை!"

"யாரப்பா அந்தக் கொடுத்து வைத்த கணவன்?"

"நீ அந்தப் பெண்ணுடைய அப்பா என்று நினைத்துக் கொண்டு இருந்தாயே அந்தக் கிழவன் தான்!"

—அதற்குமேல் என்னால் அங்கே நிற்கமுடியவில்லை; ரிசிவரை வைத்து விட்டு வந்தேன்.

நல்ல வெய்யில்; இருந்தும் இந்த உலகத்தின் ஒரு மூலை ஒரே இருட்டாக அல்லவா இருக்கிறது? ∴

ஆசிரியரும் அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.